பக்கங்கள்-16 | 11.புரட்டாதி.2022 | விலை–40.00






# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06






மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் –385



## கோட்டாவின் மீள்வருகையும் ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சியும்




## சீன நாட்டின் பொருளாதார பயங்கரவாதம் நாடுகளை அடிப்பணியச் செய்வதே இலக்கு



## 26 வருடங்களை கடந்தும் இனப்படுகொலையின் முக்கிய சாட்சியமாக கிருசாந்தி படுகொலை

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

# கோட்டாவின் மீள்வருகையும் ராஜபக்ஷர்களின் மீள்எழுச்சியும்



முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நாடு திரும்பியுள்ளமை, இலங்கை அரசியலில் இன்னுமொரு திருப்பத்தை ஏற்படுத்த வழிகோலுமா என்ற கேள்வி, எழுந்துள்ளது.

இலங்கை வரலாற்றில் என்றுமில்லாதவாறு மக்கள் கிளர்ச்சி வெடித்ததை அடுத்து கோட்டாபய ராஜபக்ஷ, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு, மாலைதீவுக்கும் அங்கிருந்து சிங்கப்பூருக்கும் பின்னர் தாய்லாந்துக்கும் ஓடித் தப்பியிருந்தார்.

இப்போது 50 நாள்களின் பின்னர், நாடு திரும்பிய அவர் வரவேற்கப்பட்டு, வாகனத் தொடரணியாக அழைத்து வரப்பட்டிருக்கின்றார்.

இது ராஜபக்ஷர்களும் மொட்டு அணியும் மீள்எழுச்சி பெறுவதான தோற்றப்பாட்டையும், குழம்பிய அரசியல் குட்டைக்குள் என்ன நடக்குமோ என்ற நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

'கோட்டா வீட்டுக்குப் போ' ஆர்ப்பாட்டம் உச்சம் தொட்டிருந்த காலத்தில், ராஜபக்ஷ வினர் மட்டுமன்றி அவர்களுக்கு ஆதரவளித்த எல்லோருமே ஓடி ஒளிந்திருந்தனர்.

'ஆளைவிட்டால் போதுமடா சாமி' எனப் பின்கதவால் கோட்டாபய தப்பி ஓடியபோது, அவரைக் காப்பாற்றவோ அவருக்குப் பரிந்து பேசவோ, யாராலும் வாயைத் திறக்க முடியாத நிலை இருந்தது.

அதேபோல், ராஜபக்ஷ சார்பு அணியினரும் குறிப்பாக, பொதுஜன பெரமுன கட்சியினர், ஓர் அறிக்கையைக் கூட பகிரங்கமாக வெளியிட முடியாத அளவுக்குப் புறமொதுக்கப்பட்டு இருந்தனர். முன்பின் தெரியாத ஆர்ப்பாட்டக்காரர்கள் செயற்பாட்டாளர் ஒருவருக்கு இருந்த சமூக அங்கீகாரம் கூட, இவர்களுக்கு இல்லாதிருந்தது.

இருப்பினும், ஏதோ ஒரு வகையில் ராஜபக்ஷர்கள் சார்பு அரசியல், மீள்எழுச்சி பெற்று வருவதான தோற்றப்பாடு ஏற்படுமளவுக்கு, உள்நாட்டுக் கள நிலைமைகள் கடந்த ஒன்றரை மாதத்துக்குள் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. மிகப் பொருத்தமாகச் சொல்வதென்றால், திட்டமிட்டு இந்தக் சூழமைவுகள் மாற்றப்பட்டுள்ளன. இந்நிலையில், கோட்டாபயவுக்காக எம்.பி பதவியை இராஜினாமாச் செய்வோம் என்று கூறுவது ஒருபுறமிருக்க, பிரதமராக்குவோம் என்கின்ற அளவுக்கு கருத்துகள் முன்வைக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

இந்தக் களநிலையை சாதகமாக மாற்றுவதற்காக, இரண்டு விடயங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

முதலாவது, மக்கள் எதிர்கொண்ட நெருக்கடிகள், தணியச் செய்யப்பட்டுள்ளன. இரண்டாவது, காலவோட்டத்தில் மக்கள் மறந்து விடுவார்கள் என்ற நியதி பரீட்சிக்கப்பட்டு இருக்கின்றது.

'கோட்டா வீட்டுக்குப் போ' போராட்டம் உருவானதற்கான காரணத்தை மட்டுமன்றி, அதற்குப் பின்னால் இருந்த சக்திகளையும் ஜனாதிபதி ரணில் நன்கு அறிந்திருந்தார். அவரை ஆதரித்த சில நாடுகளும் ஆர்ப்பாட்ட முன்னெடுப்புகளில் செல்வாக்குச் செலுத்தின.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியான கையோடு, ஓரிரு வெளிநாடுகள் ஒதுங்கிக் கொண்டன என்றுதான் தோன்றுகின்றது.

பெரும்பாலும் எந்தப் பின்னணியும் இல்லாத தரப்பினரும், ஜே.வி.பி கொள்கையுடன் தொடர்புபட்டவர்களும் தான் தொடர்ந்து குரல் எழுப்பிக் கொண்டிருந்தனர்.

ஆர்ப்பாட்டம் சோபையிழந்து போகத் தலைப்பட்ட ஒரு கட்டத்தில், ரணிலையும் வீட்டுக்குப் போகுமாறு கோரினார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்தில், ஜனாதிபதி ரணில் ஒரு கணக்குப் போட்டிருக்க வேண்டும். அதாவது, மக்களது நெருக்கடிகளுக்குக் காரணமான அடிப்படை விவகாரங்களுக்குத் தீர்வு கண்டால், மக்கள் வீதிக்கு வரமாட்டார்கள் என்பது தான் அந்த மனக்கணக்காகும்.

அதன்படி, மக்கள் எழுச்சிக்கு அடிப்படைக் காரணமான எரிபொருளையும் எரிவாயுவையும் வழங்கியதன் மூலம், மக்களிடத்தில் போராட்ட மனோநிலையை துரத்தும் திட்டம் வெற்றி பெற்றது.

இந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, தனக்கு எதிராகத் திரும்பிக் கொண்டிருந்த போராட்டத்துக்கு ஜனாதிபதி ரணில் ஆப்படித்தார். சட்டத்தை ஏவி விட்டும் ஆர்ப்பாட்டம் ஒடுக்கப்பட்டது. வெளிநாடுகள் தமது மறைகரத்தை ஒதுக்கிக் கொண்டதாலும் சாதாரண மக்கள் ஒதுங்கிக் கொண்டதாலும், இதனை செய்வது ரணிலுக்கு அவ்வளவு சிரமமான காரியமாக இருக்கவில்லை.

இந்நிலையில், கோட்டாபய ராஜபக்ஷ இலங்கைக்கு வருவதை, ஜனாதிபதி ரணில் விரும்பினாரா, அதற்கு ஒத்துழைத்தாரா என்பது, விவாதிக்கப்படுகின்ற விடயமாகும்.

பெருந்தேசிய கட்சி சார்பான எல்லா ஆட்சியாளர்களும், ஒருவரை ஒருவர் பொதுவெளியில் விமர்சித்தாலும், நிஜத்தில் பரஸ்பரம் மற்றவரைக் காப்பாற்றும் விதத்திலான ஆட்சியையே, கடந்த காலத்தில் நடத்தியிருக்கின்றனர்.

இதற்கு ரணிலும் விதிவிலக்கல்ல! ராஜபக்ஷர்களை காப்பாற்றும், அவர்களின் மாறுவேடமணிந்த ஆட்சியாளராகவே விக்கிரமசிங்க இருப்பார் என்பது அனுமானிக்கப்பட்ட விடயம் தான்.

ஆனால், ராஜபக்ஷர்களை பகைக்காத அரசியல் நிலைப்பாட்டை ரணில் எடுத்தமைக்கு, வெளிப்படையாக ஒரு காரணமிருந்தது.

அதாவது, ஐ.தே.கட்சியில் ஒரேயோர் எம்.பி ஆசனமே இருந்த நிலையில், நாடாளுமன்ற பலம் பொதுஜன பெரமுனவிடம் இருந்தது.

அவர்களில் பெரும்பான்மையானவர்கள், ராஜபக்ஷவினரின் ஏவலுக்கு இயங்குபவர்களாக இன்னும் இருக்கின்றார்கள்.

எனவே, எதிரணி உள்ளிட்ட ஏனைய தரப்புகளும் முன்வராத சூழ்நிலையில், மொட்டுவின் ஆதரவை, ரணில் சரிவரப் பயன்படுத்தியிருக்கின்றார்.

இந்தப் பின்புலத்தில், மிகக் கிட்டிய காலத்தில், 'இந்தப் பக்கம் வரவே மாட்டார்' எனக் கருதப்பட்ட கோட்டாபய, மிகப் பகிரங்கமாக நாடு திரும்பியுள்ளார்.

ராஜபக்ஷர்களின் அதிகார வேட்கை, இன்னும் தீரவில்லை. அவர்கள் வேறு வழியில்லாத ஒரு கட்டத்திலேயே, தன்னை ஒரு 'போடுகாயாக' உபயோகிக்க முனைகின்றார்கள் என்பதையும் ஜனாதிபதி ரணில் நன்கு அறிந்து வைத்திருப்பார். முன்னாள் ஜனாதிபதிக்காக, சீதா அரம்பேபொல தனது தேசிய பட்டியல் எம்.பி பதவியை இராஜினாமாச் செய்ய விருப்பம் தெரிவித்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவை பதவி நீக்கும் நகர்வொன்றைச் செய்து விட்டு, பிரதமர் தினேஸ் குணவர்தனவை (பெயரளவில்) ஜனாதிபதியாக்கி விட்டு, கோட்டாவை அதிகாரங்கள் குவிக்கப்பட்ட பிரதமர் கதிரையில் அமரவைக்கும் திட்டங்களும் உள்ளதாகக் கூறப்படுகின்றது. உண்மையில், ராஜபக்ஷர்களின் ஆதரவுடனும் மறைமுகத் திட்டத்துடனுமே ரணில் இந்த அதிகாரத்துக்கு வந்திருந்தால், அதாவது தற்காலிகமாக அவர்களே இவரிடம் இவ்வதிகாரத்தை ஒப்படைத்திருந்தால், ரணில் இதைப் பொறுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும் அல்லது, எதிர்த்தாட வேண்டும். ஆனால், எதிர்த்தாடுவதற்கான நாடாளுமன்ற பலம் ஜனாதிபதியிடம் இல்லாதிருப்பது பெரும் சவாலாகும்.

இந்தக் கோணத்தில் நோக்கினால், கோட்டாவின் வருகையை, ரணில் மனப்பூர்வமாக விரும்பியிருக்கமாட்டார் என்று கருதலாம்.

அவ்வாறாயின், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு அவசரப்பட்டு ஆப்படித்து விட்டோமா, என்று அவர் கவலைப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால், ஜனாதிபதியோ அரசாங்கமோ மீண்டும் ஒரு போராட்டத்துக்கான ஏது நிலைகளை தோற்றுவிக்காது.

ஏனெனில், இப்போது எந்தப் போராட்டம் வந்தாலும் அது 'மக்கள் போராட்டம்' என்ற தோற்றப்பாட்டை எடுக்காது. குழுக்கள், அரசியல் செயற்பாட்டாளர்களின் கோசங்களாகவே பார்க்கப்படும்.

அதேபோல், அரசாங்கத்துக்கு எதிராகப் போராடியவர்கள், தடாலடியாக கைது செய்யப்பட்டு, சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில், இன்னுமொரு போராட்டம் மிக இலகுவில் சாத்தியப்படக் கூடியதல்ல. அப்படி ஒன்று மேலெழுந்தால், அது ஜனாதிபதிக்கும் எதிரானதாகவே இருக்கலாம் என்பதையும் ரணில் விக்கிரமசிங்க அறியாதிருக்க மாட்டார்.

கோட்டாவின் மீள் வருகையால், மக்கள் போராட்டம் வெடிக்கும் என்று கருத முடியாது. ஆனால், அதிகாரத்துக்கான குழிபறிப்புகளும் கயிறிழுப்புகளும் சகஜமாக நடந்தேறும்.

கோட்டாபய இப்போதும் அரசியலில் இருக்கின்றார் அரசியல் செய்து கொண்டும் இருக்கின்றார். அவருக்குச் சாதகமான, பாதுகாப்பான களநிலைமைகள் நாட்டில் இருக்கும் என்பதை உறுதிப்படுத்தாமல் திரும்பி வந்திருக்கவும் மாட்டார்.

கோட்டாபயவின் வருகை, இலங்கை அரசியலில் சில விளைவுகளை ஏற்படுத்தப் போகின்றது என்பது வெளிப்படையானது. ஆனால், உடனடியாக அவர் பிரதிநிதித்துவ அரசியலுக்கு வரமாட்டார். ஆனால், எம்.பியாக வருவதற்கு வெட்கப்படுவார் என்று கருத முடியாது.

அதற்கிடையில், நிலைமைகளை அருகிலிருந்து நோக்குவதுடன் சகோதரர்கள் மற்றும் மொட்டு அணியுடன் இணைந்து நகர்வுகளைச் செய்ய வாய்ப்புள்ளது. அப்படி நடந்தால் பெரும்பாலும் இது கோட்டபாய - ரணில் பனியுத்தமாக அல்லது சிலவேளை கோட்டா-மஹிந்த-ரணில் மும்முனை நகர்வாக அமையலாம்.

எது எப்படியாயினும், இவ்வாறான அரசியல் குழப்பங்கள் மீண்டும் தலையெடுக்குமாயின், யாருக்கு அதன்மூலம் அரசியல் இலாபம் கிடைத்தாலும், அது, நாட்டின் அரசியல் ஸ்திரத்தன்மை மற்றும் நெருக்கடி நிலைக்கு இறங்குமுகமாகவே இருக்கும். இதற்கான விலையை மக்களே தொடர்ந்து செலுத்த வேண்டிய நிலையும் உருவாகும்.

**நெற்றிபொறியன்**

**தினப்புயல்**
**ஆசிரியர் பீடம்**
**இல:154, 6வது ஒழுங்கை**
**தேக்கவத்தை,**
**வவுனியா.**

## சிதறிக்கிடக்கும் தமிழர் அரசியல் பலம் பெறுவது எப்போது?

வடக்கு கிழக்கினை தாயகமாகக் கொண்டு இலங்கை மற்றும் உலகம் முழுவதும் பரந்து வாழ்ந்துவரும் தமிழினத்தினது அரசியல் என்பது கடந்த 30 வருடங்களாக பல்வேறு கோரிக்கைகளை இறுக்கமாக முன்வைத்த, தெளிவான, பரந்துபட்ட பார்வையுடனான, கட்டுக்கோப்பான, சக்திமிக்க, நிலைத்துநிற்கக் கூடிய ஒன்றாக பரிணாமம் பெற்றிருந்தது. சிதறிக்கிடந்த தமிழ்த் தரப்பினரை, ஆயுத இயக்கங்களை தமிழினத்தின் விடிவுக்காக, எதிர்கால நலன்கருதி ஒற்றுமையுடன் பயணிக்கும் வேலைத்திட்டம் விடுதலைப்புலிகளால் வடிவமைக்கப்பட்டு, திறம்பட செயற்படுத்தப்பட்டு வந்தது. விடுதலைப்புலிகளின் குரலாக, தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தென்னிலங்கையில், பாராளுமன்றில் தமிழ்ப் பிரதிநிதிகளின் குரல் ஓங்கி ஒலித்தது. இந்த ஒற்றுமையின் நிமித்தமே 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழினத்தின் பிரதிநிதிகளாக பாராளுமன்றத்திற்குச் சென்றனர் என்பது வரலாறு.

ஆனால், 2009 விடுதலைப்புலிகளின் மௌனிப்பின் பின்னரான தமிழினத்தின் அரசியல் என்பது திக்குத்தெரியாமல் சிதறிப்போயுள்ளது என்பது நிதர்சனமான உண்மை. வடக்கிலும் கிழக்கிலும் ஆளுக்கொரு அரசியல் கட்சிகளை புதிதாக உருவாக்கிக்கொண்டு, தற்போதைய தமிழ் அரசியல்வாதிகளால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்கிற பெருவிருட்சம் சின்னாபின்னமாகி சிதைக்கப்பட்டுள்ளது. அதனை மீண்டும் ஒட்டவைத்து வளர்த்தெடுக்கும் நோக்கம், பிரிந்துநிற்கும் தரப்பினரிடத்திலும் இல்லை, தற்போதைய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடத்திலும் இல்லை. தமிழினத்தின் கோரிக்கைகளுக்காக, தீர்வுக்காக போராடுகிறோம் எனக் கூறிவரும் குறித்த தரப்பினர் இன்று மாறி மாறி ஒருவரை ஒருவர் வசைபாடி வருகின்றனர். பாராளுமன்றிலும் வெளியிலும் சரமாரியான இவர்களது வாய்ச்சவடால் நன்றாக இதனைத் தெளிவுபடுத்துகிறது. தமிழ்ப் பிரதிநிதிகள் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்காகத் தான் அரசியல் செய்யவேண்டுமே தவிர, தத்தமது சொந்த நலன்களுக்காக அல்ல. மக்கள் வாக்கினைப் பயன்படுத்தி உங்களை பாராளுமன்றம் அனுப்புவது தமிழினத்தின் எதிர்கால விடிவுக்காக என்பதை மறந்துள்ளீர்கள்.

மாற்றங்களை எதிர்பார்த்தே ஒவ்வொரு தேர்தலிலும் தமிழ் மக்கள் வாக்களிக்கிறார்கள். ஆனால் இறுதியில் மிஞ்சுவது ஏமாற்றமே. தமிழ் மக்களின் முன்னால் பல பிரச்சினைகள் நாளுக்கு நாள் பரந்து விரிந்து செல்கின்றது. வடக்கும் கிழக்கும் பறிபோய்விடுமோ என்கிற அச்சம். எந்நேரத்திலும் வணக்கஸ்தலங்கள் இடிக்கப்படலாம் என்கிற நிலை. பல வருடங்களாக சிறைகளில் வாடும் தமிழ் அரசியற் கைதிகள். அவர்களைத் தேடியலையும் உறவுகள் என ஏராளமான சொல்லொணாப் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள், இன்று வரை கிடைக்காமல் இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றது. ஆனால் தமிழ் அரசியல்வாதிகள் எதைப்பற்றியும் சிந்திக்காமல், அரச கைக்கூலிகளாகச் செயற்படுவதும், அங்கொன்றும் இங்கொன்றும் என பேசித்திரிவதை வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

தேர்தல்கள் வருகின்றபோது ஓடிவருவதும், ஜெனீவா அமர்வுகள் நெருங்குகின்றபோது கூட்டங்களை நடத்துவதும், அறிக்கைகளை வெளியிடுவதும் என ஏமாற்று அரசியலை திறம்பட கடந்த 10 வருடங்களுக்கு மேலாக செய்துவருகின்றனர். அரச பங்காளிகளாக செயற்படுவதனாலும், முட்டுக்கொடுத்ததன் காரணமாகவும் தமிழினம் பெற்ற பயன் என்ன?, மாறாக வடகிழக்கில் சிங்கள பௌத்த மயமாக்கல் அதிகரித்துள்ளது தான் மிச்சம். அரசுக்கு ஆதரவு கொடுப்பதால் வடகிழக்கில் அல்லது தமிழினத்தின் பிரச்சினைகள் தீர்ந்துவிடும், மாகாண சபை அதிகாரங்களை வழங்கிவிடுவார்கள், அபிவிருத்தியடையலாம் என்கின்ற அரசின் பொய்யான போலியான பிரச்சாரங்களை நம்பியே உங்களது அரசியல் பயணம் தொடர்ந்து செல்கின்றது.

தமிழ் மக்களையும் எளிதில் உங்களால் ஏமாற்றவும் முடிகிறது. ஒரு சில பாராளுமன்ற உறுப்பினர்களே இன்று பாராளுமன்றிலும் வெளியிலும் தமிழ் மக்களுக்காக உரத்துக் குரல் கொடுப்பதைக் காண்கிறோம். ஏனையவர்கள் ஏன் பாராளுமன்றம் சென்றார்கள் என்கிற கேள்வியே முன்நிற்கிறது. அங்கு தமக்காக வழங்கப்படுகின்ற நேரத்தையும் வீணாக்கும் செயலையே செய்கிறார்கள். யுத்தம் நிறைவடைந்திருக்கும்நிலையில், தமிழ்மக்கள்அரசியல் விடயத்தில் பாரிய மாற்றங்களைச் செய்யவேண்டும். இது காலத்தின் கட்டாயம். பொய்யான போலியான முட்டுக்கொடுக்கும், ஆதரவளிக்கும் அரசியலால் தமிழினத்தின் பிரச்சினைகளுக்கானத் தீர்வுகள் கிடைக்காது என்பது கடந்த 10 வருடகால அனுபவம். அதற்காக யுத்தம் தான் தீர்வல்ல. எமது அரசியல் என்பது ஒற்றுமையின் பலமாக இருக்கவேண்டும். யாரும் அசைக்க முடியாத, ஒட்டுமொத்த மக்களின் குரலாக, வடகிழக்கில் மாத்திரமல்ல, உலக அளவில் ஓங்கியொலிக்கவேண்டும். அதற்கு மாற்றங்கள் நிச்சயம் தேவை. அந்த மாற்றங்கள் மக்களாலேயே சாத்தியப்படும்.

# 190 உலக வரலாற்றில் குறுஞ்சமர்



வழக்கமாகக் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஆயுதப் படைகளினதும் இராணுவத்தினரதும் வெவ்வேறு பிரிவினர் மாத்திரமன்றி, வேவு மற்றும் வேவு முறியடிப்புப் பிரிவுகள், காவற்துறை, நிர்வாகப்பிரிவுகள் போன்ற அமைப்புக்களும் பங்கெடுக்கின்றன. கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையில் பிரதேச மக்களையும் இணைத்துக்கொள்கின்ற அவசிய விடயத்தில் பிரதான கவனம் செலுத்தப்படுகின்றது.

இதனை "வியட்நாம் மயமாக்கல்" என்ற பெயரில் வியட்நாமில் அமெரிக்கர்களால் மேற்கொள்ளப்பட்ட பிரசித்திபெற்ற கொள்கை உறுதிப்படுத்தப்படுகின்றது. அமெரிக்க இராணுவக் கட்டளையகமும் ஐக்கிய அமெரிக்க சிறப்பு பிரிவினரும் கெரில்லாக்களுடனான போராட்டத்தை ஒழுங்குப்படுத்துதலில் பிரதான இடத்தை வேவு மற்றும் வேவு முறியடிப்புப் பிரிவினருக்கு வழங்குகின்றனர். கெரில்லா எதிர்ப்பு செயற்பாட்டு அறிவுறுத்தல்களில், "சாதாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதிலுள்ளதை விட, இவ்வாறான சூழ்நிலைகளில் வேவுக்காரர்களும் வேவு முறியடிப்புக்காரர்களும் கணிசமானளவு கூடுதலில் வேண்டப்படுகின்றனர்" எனக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

கெரில்லாக்களுக்கெதிரான சமரில் பெரியளவில் பிரதேச மக்களை நிச்சயம் பயன்படுத்த வேண்டும். கெரில்லாக்களைப்பற்றிய வேவுத் தகவல்களைப் பெறுகின்ற மூலங்களாக பிரதேச மக்கள் கணிக்கப்படுகின்றனர். அத்துடன், பிரதேச மக்களைக்கொண்டு "பொது மக்கள் தற்காப்பு" என அழைக்கப்படுகின்ற அமைப்பை உருவாக்குவது பரிந்துரைக்கப்படுகின்றது. இவ்வாறான அமைப்புக்கள் படைத்துறை உபகரணங்களற்ற, ஆயுதங்களை மாத்திரம் கொண்ட நகர மற்றும் கிராமவாசிகளைச் சேர்ந்த குழுக்களைக் கொண்டதாக இருக்கின்றன. இவ்வமைப்புக்களுக்கே யுரிய பணிகளாகக் கெரில்லாக்களை இனங்காணல்(குறிப்பாகக்குறைந்தளவு மக்களைக் கொண்ட பிரதேசங்களில்) தொல்லை கொடுக்கின்ற பண்பிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளல், சிறிய கெரில்லா அமைப்புக்களை அழித்தல் போன்றன ,ருந்தன.

சிறப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்காகச் சிறப்பு நிபுணத்துவ அறிவனைக் கொண்ட பிரதேச மக்களிலிருந்து குழுக்களை உருவாக்குவதென அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறான நிபுணர்களாக பின்வருவோர் விளங்கினர். காட்டிலாகவைச் சேர்ந்தவர்கள், காட்டிலாகா அதிகாரிகள், தொழிற்சாலை மற்றும் மலைச்சார் வேலையாட்கள், பண்னை மற்றும் ,ரும்புப்பாதை காவலர்கள், துறைமுகத்தொழிலாளர்கள் போன்றோரே அவர்களாவர். அத்துடன், பொதுமக்கள்சார் வேவு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களான சட்டபூர்வமற்ற வியாபாரத்திற்கெதிரான நிபுணர்கள், பிரதேச மக்களால் மேற்கொள்ளப்படும் நாசவேலைக்கும் ஓற்றாடலிற்கும் எதிரான நிபுணர்கள் போன்றவர்களையும் சேர்த்துக்கொள்ள திட்டமிடப்பட்டிருக்கின்றது.

பிரதானமாக் குறிப்பிடபடவேண்டிய விடயம் யாதெனில், கெரில்லாக்களுடனான போராட்டத்தின் வினைத்திறன்மிக்க முறைகளில் ஒன்றாக அமெரிக்க கட்டளையகம் போலியான கெரில்லா அமைப்புக்களை கருதுகின்றது. இவற்றை பிரதேச மக்கள் உள்ளடங்கலாக இராணுவப்படைப்பிரிவில் இருந்து உருவாக்க உத்தேசிக்கப்படுகின்றது. இவ்வாறான படைப்பிரிவுகளுக்கு மேலே வேவுப் பிரிவுகள் தலைமை வகித்து வழிநடத்துகின்றன.

கெரில்லாக்கெதிரான போரில் வெற்றியைத் தீர்மானிக்கின்ற நிபந்தனையாக, இந்தப்போரில் பங்கெடுக்கின்ற சகல படைகளும் ஊடகங்களும் மையப்படுத்தப்பட்ட தலைமையின் வழிநடத்தலில் இருப்பதே விளங்குகின்றது. குறித்தபிரதேசம் ஒன்றில் உள்ள கெரில்லா எதிர்ப்புப் போர் தலைமையகத்தின் உயர்பீடமாக வலய ஒருங்கிணைப்பு மையம் கருதப்படுகின்றது. இந்த மையம் வெவ்வேறு மட்டங்களில் ஒழுங்கு ப்படுத்தப்படுகின்ற ஒருங்கிணைந்த நிறுவனமொன்றைக் கொண்டதாக இருக்கின்றது. இவ்வாறான அமைப்பு குறித்தவொரு பிரதேசத்தில் நிரந்தரமற்ற படைகளுக்கெதிராக நடவடிக்கையை வினைத்திறன்மிக்க வகையில் திட்டடமிட்டு, ஒருங்கிணைத்து நடாத்தலாம்.

கெரில்லா எதிர்ப்புப்போரை ஒழுங்குப்படுத்தலும் சமருக்கான விநியோக நடவடிக்கைகளும் போர்ச் செயற்பாட்டு அரங்கு அல்லது நாடாளவிய ரீதியில் நடுவகப்படுத்தப்பட்ட நிர்வாக அமைப்பினால் கெரில்லா எதிர்ப்புச் செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டு, மேற்கொள்ளப்படுகின்றன.

இருந்த போதும், நேரடியாக கெரில்லா எதிர்புச்செயற்பாடுகளை நிறை வேற்றுபவர்களாக (கொம்பனியிலிருந்து பற்றாலியன் வரையிலான) இராணுவப் படைப் பிரிவினரே விளங்குகின்றனர். குறித்த பிரதேசமொன்றில் கெரில்லா எதிர்ப்புச்செயற்பாட்டில் ஈடுபடுகின்ற சகல இராணுவ மற்றும் பிற படைகள் நடவடிக்கைக் குழுவொன்றை உருவாக்குகின்றனர்.

கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கையின் போது, நிறைவேற்றுகின்ற பணிகளின் சிறப்பியல்புகள், பண்புகள் போன்றவற்றை பொறுத்து நடவடிக்கைகுழுவினது ஆளணியில் மேலதிகமாக முகவர் வேவு.உளவியல் போர் மேற்கொள்ளல், இராணுவ நிர்வாகத்தை ஒழுங்குப்படுத்தல், பொதுமக்களுடன் செயற்படுதல், தொடர்பு.தொழில்நுட்ப பராமரிப்பு. திருத்தவேலை போன்ற விடயங்களின் நிபுணர்களையும் (நிபுணர் குழு) சேர்த்துக்கொள்ளலாம்.

இவை தவிர, நடவடிக்கைக் குழுவில் இராணுவக் காவற்றுறை, மருத்துவத்துறை,போக்குவரத்துமற்றும் யுத்த விமானப்படை போன்றவற்றினது ஆட்களும் இருக்கலாம்.

**தொடர்வான்....**

# சீன நாட்டின் பொருளாதார பயங்கரவாதம் நாடுகளை அடிபணியச்செய்வதே இலக்கு!




பொருளாதார ஏகாதிபத்தியம் : தனது பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி நாடுகளை அடிபணியச் செய்ய செய்யும் சீனாவின் திட்டம் இது தான்.பொருளாதார ஏகாதிபத்தியம். தனது பொருளாதார வலிமையைப் பயன்படுத்தி நாடுகளை அடிபணியச் செய்ய செய்யும் சீனாவின் திட்டம் இது தான்.! இரண்டாம் உலகப் போர் முடிந்தது முதல்.யாரும் கண்டிராத கடும் சிக்கலை வுஹான் கொரனா வைரஸ் உலகம் மீது கட்டவிழ்த்துட்டுள்ளது. உலப்பொருளாதாரம் நலிவடைந்து கிடக்கிறது. மக்கள் இன்னும் பெரிய அளவில் பல நாடுகளில் மரணமடைந்து கொண்டிருக்கிறார்கள். கொரானா வைரஸீடன் நாம் நெடுநாள் வாழ வேண்டியிருக்கும் என்ற உண்மையும் கொஞ்சம் கொஞ்சமாக புரிய ஆரம்பித்துள்ளது. இந்த ஆபத்தை உலகம் முழுதும் ஒன்றிணைந்து போராடும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும், வாழ்க்கையின் சில அடிப்படை உண்மைகளை எல்லாரும் வெகு விரைவில் அறிந்து கொண்டார்கள். காரணம், இந்தப் பேரழிவின் மையத்தில் சீனா உள்ளது.

கொரானா வைரஸின் தீவிரத்தைக் குறித்து உலகத்துக்கு எச்சரிக்கை கொடுக்காமல், WHO வில் தனக்குரிய செல்வாக்கை பயன்படுத்திநாடுகளைஅக்கறையில்லாமல் இருக்க செய்து விட்டு, இப்போது தன்னுடைய பொருளாதார அசுர பலத்தை பயன்படுத்தி உலகத்தை அடிபணிய வைக்கப் பார்க்கிறது சீனா. உலகளாவிய அளவில் உற்பத்தித் தொழிற்சாலைகளின் மையமாக இருப்பதால் , அடுத்த நாடுகளின் மீது அதற்கு வலுவான பிடி உள்ளது. தான் நினைத்தால் அந்த நாடுகளின் பொருளாதாரத்தை முடக்க முடியம் என்றும் சீனாவுக்கு நன்றாகத் தெரியும்.

இதன் அடிப்படையில் தான் வுஹான் வைரஸ் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் அழைத்த போது மருத்துவ விநியோகங்களை அமெரிக்காவிற்கு நிறுத்தி விடுவதாக சீனா மிரட்டியது. சீனா அப்படி நிஜமாகவே செய்திருந்தால் அமெரிக்கா கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கும். அமெரிக்காவின் 95% anti bioti உள மருந்து சீனாவிலிருந்து வருகிறது. அமெரிக்க அதிபரும் வுஹான் வைரஸ் என்று அழைப்பதை வெகு விரைவில் நிறுத்தி விட்டார். இந்த வெற்றியின் மூலம் துணிவடைந்த சீனா மற்றவர்களையும் இப்போது மிரட்ட ஆரம்பித்திருக்கிறது. போன மாதம் நெதர்லாந்துக்கு மருத்துவ உதவிகளை நிறுத்தி விடுவித்தாக மிரட்டியது. தாய்வான் .முககவசங்களை நெதெர்லாந்துக்கு அனுப்பியதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, தாய்வானிலிருக்கும் தங்கள் தூதரகத்துக்கு 'Netherlands office Taipei' என்று பெயர் மாற்றினர். தங்களுடைய 'ஒரே சீனா' கொள்கைக்கு இது பொருந்தாததால் சீனா கோபமடைந்தது

இந்த வார தொடக்கத்தில், ஜப்பானிய கடலில் செங்காகு தீவுகளுக்கு அருகே சீன அரசாங்க கப்பல்கள் ஜப்பானிய மீன்பிடி படகுகளை துரத்தியது. இந்த சம்பவம் தொடர்பாக டோக்கியோ தனது எதிர்ப்பை சீனாவுக்கு பதிவு செய்தது.

மேலும், கொரோனா வைரஸ் தொற்றுநோயின் தோற்றம் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஆவுஸ்திரேலியா திரும்பப் பெற மறுத்ததைத் தொடர்ந்து ஆஸ்திரேலிய பார்லி மீது 80 சதவீத இறக்குமதி வரியை விதிக்க சீனா அச்சுறுத்தியதால் ஆவுஸ்திரேலியாவும் சீனாவின் கோபத்தை அனுபவிக்கக்கூடும். இவை அனைத்திற்கும் மேலாக, இரண்டு சீன ஊடகங்கள், கிர்கிஸ்தான் மற்றும் கஜகஸ்தான் ஆகியவை சீனாவின் ஒரு பகுதியாக இருந்தன என்றும் கஜகஸ்தானும் கூட "சீனாவுக்குத் திரும்ப ஆர்வமாக உள்ளன" என்றும் கூறியது.

இந்த இரு நாடுகளும் சீனாவிடமிருந்து பெரும் நிதி முதலீடுகளைப் பெற்றுள்ளன, அவை கம்யூனிஸ்ட் ஆட்சியின் விரோதப் போக்குகளுக்கு குறிப்பாக பாதிக்கப்படக்கூடியவை.

சீனாவின் இந்த திட்டம் , நிச்சயமாக, அமெரிக்கா பின்பற்றும் திட்டத்தை விட வேறுபட்டதல்ல. பிற நாடுகளின் இறையாண்மையைக் குறைமதிப்பிற்கு உட்படுத்துவதற்கும், உலகெங்கிலும் அதன் மேலாதிக்கத்தைப் பாதுகாப்பதற்கும், அதன் பெரிய பொருளாதார மற்றும் இராணுவ வலிமையின் ஆதரவோடு, 'சிவில் சமூக அமைப்புகள்' மற்றும் 'மனித உரிமை தன்னார்வ தொண்டு நிறுவனங்கள்' ஆகியவற்றின் விரிவான வலையமைப்பைப் பயன்படுத்தி அதே நோக்கங்களை அடைய முயல்கிறது.

சீனா. உலகம் இந்த கம்யூனிச ஆட்சியின் கீழ் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள ஒரே வழி, உலக விநியோக சங்கிலியில் (Global Supply Chain )ல் சீனாவின் ஆதிக்கத்தைக் குறைப்பது தான். அதை அடைய பெரும் பிரச்சனைகளையும், போராட்டங்களையும் உலகம் சந்திக்க வேண்டியிருக்கும். சமீபத்தில் நடப்பதை வைத்துப் பார்த்தால்.மற்ற எல்லா நாடுகளையும் விட கொரானாவிற்கு பிறகு வலிமையான நாடாக சீனாவே உருவாகலாம். கொரானாவிற்குப் பிந்தைய உலகம் அமெரிக்க மேலாதிக்கத்தை அடிப்படையாகக் கொண்டதாக இருக்காது என்பது தெளிவு. அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தில் இலங்கைக்கு அநீதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. சீனா எமது வளங்களை மாத்திரம் அல்ல கிடைக்கும் வருமானத்தையும் அள்ளி செல்கின்றது. அரசாங்கம் ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கு முன்னர் தேசிய பாதுகாப்பு மற்றும் நாட்டின் இறையாண்மை போன்ற விடயங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தியிருக்க வேண்டும். ஆனால் அரசாங்கம் அவ்வாறு செய்யாது மக்கள் மத்தியில் போலியான பிரச்சாரங்களை செய்து வருகின்றது. அம்பாந்தோட்டை துறைமுகத்திற்கான காணி மதப்பீடு மிகவும் அநீதியான வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ளது. பெறுமதி மிக்க காணிகள் ஆக குறைந்த விலைகளில் கொடுக்கப்பட்டுள்ளது.

சீனாவுடனான அம்பாந்தோட்டை துறைமுக திட்டத்தில் 80 வீத பங்குகள் சீனாவிற்கும் 20 வீதமான பங்குகள் இலங்கைக்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை நிராகரிக்கும் வகையில் அரசாங்கம், 60 வீதமான பங்குகள் சீனாவிற்கும் 40 வீதமான பங்குகள் இலங்கைக்கும் என போலியான பிரசாரங்களை செய்து வருகின்றது. சீனாவுடனான ஒப்பந்த வரைபை இதுவரையில் அரசாங்கம் வெளியிடாதது ஏன் ? என்ற கேள்வி அனைத்து மக்களுக்கும் உண்டு.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் மூன்றாம் கட்டம் 2ஆயிரம் மில்லியன் அமெரிக்க டொலர்களாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்பந்தத்தில் ஏற்கனவே ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக 80 வீதமம் சீனாவிற்கும் 20 வீதம் இலங்கைக்கு எனும் போது, மூன்றாம் கட்ட பணிகளுக்கான 20 வீதத்தை அதாவது 400மில்லியன் அமெரிக்க டொலர்கள் இலங்கை வழங்க வேண்டியதுள்ளது. இந்த தொகையை செலுத்தா விட்டால் சீனாவின் 80 வீதமான பங்குகளில் அதிகரிப்பு நிலை ஏற்படும்.



ஒப்பந்தத்தில் காணப்படும் இந்த உண்மைகளை நல்லாட்சி அரசாங்கம் மக்களுக்கு கூற வில்லை. மாறாக 10 வருடத்தில் 50 வீதமான பங்குகள் இலங்கைக்கு கிடைக்கும் என கூறி வருகின்றது. மேலும் அம்பாந்தோட்டை துறைமுக திட்டம் முழுமையடைந்து 6 மாதங்களின் பின்னர் சீனா சர்வதேச மதிப்பீட்டின் அடிப்படையிலேயே இலங்கையுடன் இலாப நட்டத்தை பகிரப்போகின்றது. ஆனால் தற்போது முன்னெடுக்கப்பட்ட அனைத்து மதிப்பீடுகளும்உள்ளகஅளவுக்கோள்களை கொண்டே மேற்கொள்ளப்பட்டுள்ளன. சர்வதேச முதலீடுகளுக்காக ஒப்பந்தங்கள் மேற்கொள்ளும் போது விஞ்ஞான ரீதியில் கவனத்தில் கொள்வது மிகவும் அவசியமானதாகும். 100 கிலோ மீற்றர் பரப்பிற்குள் வேறு துறைமுகசார் நடவடிக்கைகள் இடம்பெற கூடாது.

அம்பாந்தோட்டை துறைமுகத்தின் பாதுகாப்பு சீனா வசமே காணப்படும் போன்ற விடயங்களை அரசாங்கம் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். தேசிய பாதுகாப்பிற்கு இது சவாலான விடயமாவே காணப்படும். அது மாத்திரமின்றி தென்னிந்திய கடலில் இலங்கைக்கு காணப்படும் சிறப்பின் அதிகாரம் சீனாவின் வசம் செல்லும் நிலையே அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தத்தில் இடம்பெற்றுள்ளது என குறிப்பிட்டார்.

**துரோணர்**

# 26 வருடங்களை கடந்தும் இனப்படுகொலையின் முக்கிய சாட்சியமாக கிருசாந்தி படுகொலை




இனப்படுகொலை தொடர்பான பேச்சுக்கள் மறுபடியும் முதன்மையிடத்துக்கு வருகின்றன. வடக்கு மாகாண சபை கொண்டு வந்த தீர்மானமும், ஐ.நா நிலவரங்களும் அதனைக் கிளறிவிட்டிருக்கின்றது. போர்க்குற்றங்கள் தொடர்பான ஐ.நாவின் விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டிருக்கிறது.

இதனால்உண்மைகள்மறைக்கப்படுவதற்கும், பாதிக்கப்பட்டோரிற்கான நீதி, நியாயங்கள் முற்றாக மறுக்கப்படுவதற்கும் வாய்ப்புக்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன. ஏற்கனவே சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும், ஊடகங்களும் பல்வேறு வடிவிலான ஆவணப்படுத்தல்களை இந்த விடயம் தொடர்பில் தயாரித்து வைத்திருக்கின்றன.

ஆனால் அவை தமிழ் இன அழிப்பின் இறுதிக் கட்டத்தில் சேமிக்கப்பட்டவை. இந்த இன அழிப்புக்கு திரட்சித் தன்மைமிக்க ஒரு வரலாற்றுத் தொடர்ச்சி இருப்பதையும், பல்வேறு காலகட்டங்களிலும், பல வடிவங்களில் இன அழிப்பு அல்லது இன சிதைப்பு மேற்கொள்ளப்பட்டதென்பதையும் அந்தத் தரவுத் தேட்டங்கள் காணத்தவறியிருக்கின்றன.

ஓர் இன அழிப்பின் முதல் இலக்கு ஆண்கள் என்றால், அதன் இரண்டாம் இலக்கு பெண்கள் தான். ஆயிரம் ஆண்களைக் கொன்று வீசுவதால் எழும் அதிர்வைவிட, ஒரு பெண்ணை பாலியல் வன்புணர்வுக்குள்ளாக்கிக் கிழித்துப்போடுதல் பேரதிர்வை ஏற்படுத்தும். இன அழிப்புக்குள்ளாக்கும் மக்களின் உளவியலை மோசமாக மிரட்சியடையச் செய்யும். கிருசாந்தி தொட்டு, இசைப்பிரியா வரை அதனை அவதானித்திருக்கிறோம். அனுபவித்திருக்கிறோம். அதில் முக்கிய இனவழிப்பு ஆவணமாக யாழ்ப்பாணம் சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி கிருசாந்தியின் படுகொலையும், அதற்குப் பின்னரான செம்மணி புதைகுழியும் பதிவுசெய்யப்படல் வேண்டும்.

செம்மணி ஓர் இனத்தின் மீது நடத்தப்பட்ட கூட்டு இனப்படுகொலையின் அடையாளம். ஆனால் அது விரைவாகவே மறக்கப்பட்டாயிற்று. இங்கு பிரயோகமாகும், தாமதிக்கப்படும் நீதி வழங்கலானது, அநீதிக்கு சமமானதாக மாறிவிடுகின்றது.

தமிழர்கள் மனங்களிலிருந்து என்றும் அகலாத படுகொலை நினைவுகளுக்குள் செம்மணியும் உள்வாங்கப்படல் வேண்டும். 600க்கும் மேற்பட்ட தமிழ் உயிர்கள் புதைக்கப்பட்ட அந்த வெளி ஒரு படுகொலையில் காட்சிப் படிமமாக நிறுவப்பட்டால் அது தெற்கிலிருந்தும், மேற்கிலிருந்தும் வரும் சுற்றுலாவிகளுக்கு நம் இனத்துயர் செய்தியை அறிவிக்கும்.

இதில் இன்னுமொரு விடயத்தையும் குறிப்பிட வேண்டும். வெறுமனே இனப்படுகொலை நடக்கின்றது என்பதை ஒரு சம்பவக் குறிப்பாக மட்டும், ஒரு வரியில் குறிப்பிட்டுத் தீர்மானம் வெளியிடல் போதாமைகளைக் கொண்டதாகக் கணிக்கப்படும். இங்கு நடந்தது இனப்படுகொலைதான் என்பதை நிரூபிக்க ஆதாரபூர்வமாக, சம்பவக் கோர்வையாக அவற்றை தொகுத்து வெளியிடவேண்டும். உலகளவில் அநீதிக்குள்ளான இனங்கள் அதனையே செய்திருக்கின்றன. அவ்வாறு செய்தலே அது ஆரோக்கியமுள்ள அரசியல் பயணமாக அமையும்.

யாழ்ப்பாணம் வரவேற்கின்றது. இப்போது புதிய வடிவம் பெற்றுவிட்டது. ஒருவித அபிவிருத்தியின் மெருகூட்டலுடன் அனைவரையும் வரவேற்றுக்கொண்டிருக்கிறது. ஈழத்தமிழர் மறந்துபோன வரலாற்றுப் பக்கங்களில் முக்கிய இரு சம்பவங்களை இந்த மையம் வைத்திருக்கிறது.

1996 ஆம் ஆண்டு செப்டெம்பரில் இந்த இடத்தில்தான் கிருசாந்தி தொலைக்கப்பட்டாள். 2000 ஆம் ஆண்டு விடுதலைப்புலிகள் மேற்கொண்ட படையியல் நடவடிக்கை இந்த வளைவு வரை விரிந்திருந்தது.

இந்த இரு சம்பவங்களும் தமிழர்களால் மறக்கப்பட முடியாதவை தான். ஆனால் மறதியின் அரசியல் அனைத்தையும் மூடச் செய்திருக்கின்றது. விரும்பியோ, விரும்பாமலோ மறந்து போவதை விரும்புகின்றோம். அப்படியான காலத்தில்தான் கிருசாந்தியை மறதியின் அடுக்குகளிலிருந்து மீண்டும் கிளறியெடுக்க வேண்டியிருக்கின்றது.

1996 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 07 ஆம் திகதி ஒரு விபத்து நடந்தது. சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் உயர்தரம் கற்றுக்கொண்டிருந்த மாணவியொருவரை இராணுவ வாகனம் மோதிக்கொன்றது. இராணுவத்துக்கு எதிராக மூச்சுக்கூட விடுவதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டிருந்த அந்தக் காலத்தில் மாணவிகள் அமைதியாக சாவு வீட்டைக் கடைபிடித்தனர். வெள்ளைச் சீருடைகளுக்கு தனியான மரியாதையுண்டு என்ற பொது மதிப்பீட்டின் அடிப்படையில் தனியாகவும், சேர்ந்தும், தம் லேடீஸ் சைக்கிள்களில் நாவற்குழியிருக்கும் அந்த செத்த வீட்டிற்கு சென்று வந்தனர்.

அந்த நம்பிக்கையை கையில் பிடித்துக்கொண்டு தன் சைக்கிளில் இறுதிச் சடங்கிற்குப் போன கிருசாந்தி தனியே வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். வெட்டைக்காற்று பேயென அடித்துக்கொண்டிருந்தது. எப்போதாவது கடக்கும் வாகனங்கள் அவளைக் கடந்து போய்க்கொண்டிருந்தன சிலர் அவளை அவதானித்துமிருந்தனர்.

அவர்கள் அவதானித்த வேளையில் இராணுவத்தினர் அவளை "யாழ்ப்பாணம் வரவேற்கிறது" வளைவுக்கு அருகில் நிறுத்தி விசாரித்துக் கொண்டிருந்தனர். அதன் பின்னர் அவளுக்கு என்ன நடந்தது என்ற விடயம் ஆறு வாரங்கள் கழித்து வந்த பத்திரிகைகளில் கொட்டை எழுத்துக்களில் செய்தியாக வெளிவந்தது.

"அச்சமயம் அங்குள்ள கொட்டகை ஒன்றுக்குள் இருந்த கோப்ரல் ஒருவர் மாணவியை உள்ளே கொண்டு வருமாறு கட்டளையிட்டதை அடுத்து சோதனைக்கடமையில் ஈடுபட்டிருந்த படையினர் மாணவியை உள்ளே கொண்டு சென்றனர். மகள் பாடசாலையிலிருந்து திரும்பாததால் தாயாரும், தம்பியாரும் அவளைத் தேடிப் புறப்பட்டனர். அவர்களும் அதேசோதனைமுகாமை அமைந்தனர். அங்கு ஒரு மணித்தியாலம் வரை காத்திருந்தனர். அவர்களும் வீடு திரும்பாததையிட்டு அயலவர் ஒருவரும் அந்தச் சோதனை முகாமுக்கு தேடிச்சென்றனர்.ஏற்கனே வீடு திரும்பாத மூவர் குறித்து சம்பந்தப்பட்டஅயலவர்விசாரித்த போது அவரும் உள்ளே கூட்டிச்செல்லப்பட்டார். அவர்கள் இராணுவத்தினரின் தங்கும் அறையின்பின்புறத்தில் கைகள் பின்புறமாகக் கட்டப்பட்டநிலையில் வைக்கப்பட்டனர்.

மாணவி கிருசாந்தி வேறிடத்தில் வைக்கப்பட்டிருந்தாள். பின்னர் இரவு பத்து மணியளவில் கிருசாந்தி தவிர்ந்த மூவரும் கழுத்தியில் கயிற்றால் நெரிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர். அவர்களில் இருவர் ஒரு குழியிலும், மற்றொருவர் இன்னொரு குழியிலுமாக புதைக்கப்பட்டனர்.

பின்னர் நள்ளிரவு 12 மணியளவில் மாணவி கிருசாந்தியை பதினொரு பேர் வன்புணர்வு செய்து கொலைசெய்தனர்"

**உதயன் : 27.10.1996**

1996 ஆம் ஆண்டு கிருசாந்தியின் படுகொலை யாழ்ப்பாணத்தில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இலங்கை நாடாளுமன்றத்திலும், சர்வதேச அரங்குகளிலும் முக்கிய பேசுபொருளாக இந்த விடயம் எடுத்துக் கொள்ளப்பட்டது. தம் மீது விழுந்த குற்றச்சாட்ட போக்குவதற்கு உடனடி விசாரணையை இராணுவத்தரப்பு ஆரம்பித்திருந்தது. அதன் விளைவாக ஏழு இராணுவத்தினரும், இரண்டு பொலிசாரும் கைதுசெய்யப்பட்டனர். அவ்வாறு கைதுசெய்யப்பட்டவர்களில் ஒருவர் அளித்த வாக்குமூலம் கீழே பதிவிடப்படுகின்றது.

**வாக்குமூலம்**

1996 ஆம் ஆண்டு அரியாலை துண்டிப் பகுதியில் அமைந்திருந்த இராணுவ முகாமில் சிவில் நிர்வாகப் பகுதியில் கட்டளை அதிகாரியான கப்டன் லலித் ஹேவாவுக்கு கீழ் பணிபுரிந்தேன். அரியாலை, துண்டுப் பகுதியில் வீடுகளில் உள்ளவர்களின் விபரங்கள் மற்றும் அந்தப் பகுதியில் உள்ள இளைஞர்களின் விவரங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தப் பணியை மேற்கொண்டிருந்த சமயம் புலனாய்வுப் பிரிவு வேலையும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

புலனாய்வுப் பிரிவு வேலைகளுக்கு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்தன ஆகியோர் உட்பட சில வீரர்கள் இந்தப் பிரிவில் இருந்தனர். அவர்களின் கீழ் நான் செயற்பட்டேன். இந்தச் சந்தர்ப்பத்தில் அரியாலைப் பகுதியில் சுற்றிவளைப்பு ஒன்றை இராணுவத்தினர் நடத்தினர். அந்தப் பகுதியில் உள்ள வீடுகளில் இருந்த சகலரையும் வெளியே அழைத்து வந்து நெடுங்குளம் எனும் இடத்தில் ஒன்று சேர்த்து விசாரித்தோம்.

அந்த சந்தர்ப்பத்தில் இங்கு மேஜர் வீரக்கொடி, மேஜர் குணசேகர ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். அவர்கள் முகமூடி அணிந்த இருவரை அழைத்து வந்து அங்கு நின்ற பொதுமக்கள் முன்நிறுத்தினர். அந்த இரு முகமூடி நபர்களும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் எனத் தெரிவித்து ஐம்பது பேரை அடையாளம் காட்டினார்கள். அங்கு ஐம்பது பேரும் வீடியோ படம் எடுக்கப்பட்டதுடன் எம்மிடமிருந்த பெயர் பட்டியலுடன் அவர்களின் பெயர் விபரங்கள் ஒப்பிட்டும் பார்க்கப்பட்டன. பின்னர் அவர்களின் வீட்டு முகவரிகள் பெறப்பட்டு அவர்கள் விடுவிக்கப்பட்டார்கள்.

விடுதலைப் புலிச் சந்தேக நபர்களைக் கண்டுபிடிக்க அந்த முகவரியின் படி முயற்சிகள் எடுக்கப்பட்டன. அரியாலைப் பகுதியில் மக்கள் எவ்வாறு கைதுசெய்யப்பட்டார்கள்? எவ்வாறு கொல்லப்பட்டார்கள்? எங்கு புதைக்கப்பட்டார்கள்? என்ற விவரங்களை என்னால் நிச்சயமாகக் கூறமுடியும்.

அரியாலைப் பகுதியில் முதலில் கைதானவர்கள் தபால்கட்டுச் சந்தியில் 7 ஆவது காலாட் படையணிப் பிரிவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா தலைமையில் இயங்கிய "சி" பிரிவிலும், அரியாலையில் உள்ள கட்டடத்திலும் பலர் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டு வந்தனர். மற்றொரு தடுப்பு முகாம் தபால்கட்டை சந்தியில் இருந்து செல்லும் பாதையில் பாடசாலைக்கு அருகில் உள்ள விடுதலைப் புலிகள் அமைத்த முன்னைய அலுவலகத்தில் இயங்கியது. கல்வித் திணைக்களத்தில் கடமையாற்றும் செல்வரத்தினம் என்பவரைக் கைது செய்து "சி" பிரிவு முகாமில் தடுத்து வைத்திருந்தனர். அவரைக் கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்தன, லெப்டினன்ட் துடுகல்ல ஆகிய மூவரும் சேர்ந்து கைதுசெய்தனர். அவரை விடுவிக்குமாறு அவரது மனைவி, பிள்ளைகள், என்னிடம் கேட்டனர்.இதனையடுத்து அந்த முகாமுக்கு சென்ற சமயம் செல்வரத்தினம் என்னைக் கண்டதும் தான் விடுதலைப் புலிகளுடன் தொடர்பற்றவர் எனத் தெரிவித்து தன்னை விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மன்றாட்டமாகக் கேட்டார்.


விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இல்லாதவர் என்பதால் அவரை விடுவிக்குமாறு கப்டன் லலித், கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா ஆகியோரிடம் கோரினேன். அவரை விடுவிப்பதாக அவர்கள் தெரிவித்தனர். ஆனால் அன்று இரவே அவரைக் கொலை செய்து விட்டார்கள். மறுநாள் நான் போனபோது அங்கு 10 சடலங்கள் கிடந்தன.

**சித்திரவதை**

மற்றொரு சம்பவத்தில் யோகேஸ்வரன் என்பவர் கடமை முடிந்து வீடு திரும்பிக்கொண்டிருந்த சமயம் தயா கட்டடத்தில் உள்ள முகாம் படையினர் அவரைக் கைது செய்தனர். அடுத்த நாள் "சி" வதைமுகாமுக்கு கொண்டு சென்றனர். இந்தமுகாம் கொட்டுக்கிணற்றுப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் உள்ள வீடுகளில் இருந்தது. பிரஸ்தாப நபரை விடுவிக்குமாறு மேலிடத்தில் இருந்து கிடைத்த உத்தரவை அந்த முகாமுக்கு எடுத்துச் சென்றேன். அங்கு அவர் தலைகீழாகக் கட்டப்பட்டிருந்தார். பிளேட்டினால் அவரது உடலில் வெட்டிக் காயப்படுத்திக் கொண்டிருந்தனர். கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா, லெப்டினன்ட் துடுகல்ல, உதயமார ஆகியோரே இந்தச் சித்திரவதையை செய்துகொண்டிருந்தனர்.

கழியோடி
10ஆம் பக்கம் பார்க்க...

# இலங்கையில் இடம்பெற்றது இனப்படுகொலை!



தற்பொழுது தமிழ் மக்கள் மத்தியில் பாரிய ஒரு சர்சையாக இருக்கின்றது. பல சிங்கள அரசியல் ஆய்வாளர்கள் முக்கிய இராணுவ தளபதிகள் சி.ஐ.டி. என்.ஐ.பி.டி.ஐ.பி போன்றவர்களுக்கு மிக முக்கியமான சந்தேகமாகவிடுதலைப்புலிகளின்தலைவர் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? என்பதும் இதுமட்டுமன்றி பொட்டு அம்மன் உயிருடன் இருக்கின்றாரா? இல்லையா? அவ்வாறு அவர்கள் இருப்பார்களாக இருந்தால் மற்றுமொரு ஈழக்கட்ட போர் இடம்பெறுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கின்றனவா? என்கின்ற ஒரு நிலைப்பாடு இவ்வாறு இருக்கவே தொடர்ந்தும் இந்த அரசாங்கம் விடுதலைப்புலிகள் மீது பயங்கரவாத தடைச்சட்டத்தை இந்த நாட்டிலே திணித்திருக்கின்றது.

ஆகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை இலங்கையில் இருந்து அரசு நீக்குமாக இருந்தால் அவர்கள் பாரிய இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்படுவார்கள் என்ற காரணத்தை மேற்கோள் காட்டி தற்பொழுது இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை அவர்கள் எடுப்பதற்கான எந்த ஒரு வாய்ப்புக்களும் இல்லாத ஒரு சூழல் ஏற்பட்டிருக்கின்றது. அவ்வாறு இருப்பினும் அதற்கு ஒரு ஒத்தான அதனை இல்லாதொழித்து அதற்கு ஒப்பான இன்னொரு அதிகாரத்தை பயன்படுத்துகின்ற பயங்கரவாத தடைச்சட்டத்தை கொண்டு வருதற்கான மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக தான் இலங்கை அரசு தொடர்ந்தும் நடவடிக்கை கொண்டு வருகின்றது.

இனப்படுகொலை இடம்பெற்றதற்கான சான்றுகளாக 56.83.90.2000 என்று கட்டம் கட்டமாக இலங்கையில் இனப்படுகொலைகள் இடம் பெற்று 2009 வரை நீண்டு சென்றதற்கான ஆதரங்கள் காணப்படுகின்றது. குறிப்பாக பார்க்கின்ற பொழுது இனப்படுகொலை சகோதரபடுகொலை இரண்டையும் தமிழ் மக்கள் தமிழ் மக்களுக்குள் அடிப்பட்டுக்கொண்டு சென்றதையும் அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகள் சுட்டுக்கொண்டார்கள் என்பதையும் அவர்கள் இணைத்து பார்க்கின்றார்கள்.

அது போன்று சிங்கள பிரதேசத்தினை பார்க்கின்ற பொழுது ஜே.வி னரால் மக்கள் சுட்டுக்கொள்ளப்பட்டார்கள் அப்பொழுது அரச பயங்கரவாதம் திணிக்கப்பட்டிருந்தது. அப்பொழுது இடம்பெற்றது எல்லாம் ஆயுதம் ஏந்தியது எல்லாம் அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல விடுதலைப்புலிகள் தான் பயங்கரவாதிகள் என்ற ஒரு நிலைப்பாடு இவர்கள் எடுத்து உள்ளார்கள்.

ஆகவே விரும்பியோ விரும்பாமலோ தமிழினத்தின் விடுதலைக்காக ஒரு போர் இடம்பெற்றது. அது நீதி.நிர்வாகம்.கட்டமைப்பு போன்ற முப்படைகளையும் கொண்ட அமைப்பாக தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கிலும் கிழக்கிலும் இலங்கையிலும் திகழ்ந்தார்கள் என்பதுதான்ஒருஉண்மையானவரலாறாக இருக்கின்றது. ஆகவே இவ்வாறான ஈழக்கனவோடு போராடிய தமிழ் மக்களின் உரிமைக்காக போராடிய ஒரு இயக்கத்தை பயங்கரவாதிகள் என முத்திரை குத்தி அந்த இயக்கத்தோடு பேச்சுவார்த்தை நடத்தி கிட்டத்தட்ட 14பேச்சுவார்த்தை சர்வதேச ரீதியாக 7பேச்சுவார்த்தைகளும் உள்ளூர் பேச்சுவார்த்தையாக 7பேச்சுவார்த்தைகளும் இடம் பெற்றிருக்கின்றது. இதிலே இறுதியில் எதுவும் கைகூடாமல் போனதன் காரணம் இவர்கள் தொடர்ந்தும் தமிழீழ விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் அவர்கள் கொலைகாரர்கள் என்கின்ற ஒரு தோரணையிலே உலக நாடுகளுக்கு சென்ற மறைந்த லக்ஷ்மனன் கதிர்காமர் அவர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளை சர்வதேச ரீதியாக தடைசெய்வதற்கு ஊன்றுகோளாக செயற்பட்டார். அதன் நிமித்தமாக தான் தமிழீழ விடுதலைப்புலிகளால் கொழும்பில் வைத்து சுட்டுக்கொள்ளப்பட்டார். இது போனறு தேச துரோகியாக செயற்பட்ட தமிழனத்தின் போராட்டத்தை காட்டிகொடுத்த அல்பட் துரையப்பா தொடக்கம் லக்ஷ்மக் கதிர்காமம் வரையிலான 172 அரசியில் புத்தியீவிகள் என்று கூறப்படுகின்ற வர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்கள்.இவர்கள் இந்த போராட்டத்தை காட்டிகொடுத்தார்கள் என்ற ரீதியில் தான் அவர்கள் சுட்டுக்கொள்ளப்பட்டார்களே தவிர விடுதலைப்புலிகள் ஒரு இனத்தை அழித்தார்கள் என்ற வரலாறு இல்லை.

ஆகவே விடுதலைப்புலிகள் தமிழின படுகொலைகளை செய்கின்றார்கள் என்று கூறி அவர்களை அங்கிகரீக்ககூடாது என்று லக்ஷ்மன் கதிர்காமர். நீலஞ்திருச்செல்வன் போன்றோர் செயற்பட்டதன் விளைவு அவர்களை சுட்டுகொலை செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதே போன்று ரெலோ.புளெட்.ஈ.பி.ஆர். எல்.எப் போன்ற இயக்கங்களை ஒரு தமிழினத்தின் விடுதலைக்காக போராடிய இந்த இயக்கங்கள் எல்லாம் இறுதியிலே இராணுவ கைக்கூலியாக அந்த காலக்கட்டத்திலே செயற்பட்டுக் கொண்டிருந்தார்கள். 2009ற்கு முற்பட்ட காலப்பகுதியிலே ஆனால் ஒரு வகையில் ரெலோவும். ஈ.பி.ஆர்.எல்.எப் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து ஒரு சில செயற்ப்பாடுகள் செய்தாலும் ஈ.பி. ஆர்.எல்.எப் தனித்து தான் ஒரு சில செயற்பாடுகளை செய்தார்கள். ரெலோவும் இரண்டு அணிகளாக செயற்ப்பட்டார்கள். ஈ.பி.ஆர்.எல்.எப் இரண்டு அணிகளாக செயற்ப்பட்டார்கள். குறிப்பாக சொல்ல போனால் வரதர் அணி.சுரேஷ் அணி என்று செயற்பட்டது. ரெலோவிலும் ஸ்ரீ ரெலோ.செல்வம் அடைக்கலநாதன் தலைமையிலான இரு அணிகள் செயற்ப்பட்டுக்கொண்டிருந்தது. கிழக்கை பொறுத்த வரையிலே ரெலோ வரதன் பேன்ற ஒருவரும் பிரசன்னா என்கின்ற ஒருவரும் அவரும் வேறு வேறு பிரிவுகளாக செயற்ப்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

இன்னுமொரு விடயமாக இந்த ஆயத போராட்டங்கள் எல்லாம் கடந்த காலத்தில் இடம்பெற்றதான விடயங்களை உள்வாங்கிக்கொண்டு அதிலே ஒரு இனப்படுகொலைகள் இடம்பெற்றதாக கூறப்படுகின்ற விடயங்கள் அனைத்தும் ஒரு பொய்யான தகவல்களாகவே இருக்கின்றன. அது ஆயத குழுக்கள் தங்களுக்குள்ளே மோதிக்கொண்ட ஒரு விடயம். இந்தியா கடந்த காலங்களிலே ஆயத குழுக்களை பயன்படுத்திய விதங்கள் என்பது இலங்கையிலே தமக்கான ஒரு பூகோள ரீதியான அரசியலை கட்டியெழுப்ப வேண்டும் என்பதற்காகவே ஆனால் தற்பொழுது அதையும் கை மீறி சீனா. அமெரிக்கா போன்ற நாடுகள் அதனையும் கை மீறி ஒரு செயற்ப்பாட்டை செயற்படுத்திக்கொண்டு இருக்கின்றார்கள். ஆகவே இன்றைய காலக்கடடத்தை பார்க்கின்ற பொழுது இந்த கந்தன்கருணை படுகொலை என்கின்ற ஒரு விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. அடிக்கடி டக்லஸ் தேவானந்தா கூறுவார்.

இந்த கந்தன் கருணை படுகொலை என்பது ரெலோ உறுப்பினர்களை இலக்கு வைத்து தாக்கப்பட்டதாக கூறப்படுகின்றது. ரொலோ உறுப்பினர்கள் ஏன் கொலை செய்யப்பட்டார்கள் அதாவது ஒரு இந்தியாவினுடைய சதியின் ஊடாக குறிப்பாக ரெலோவினுடைய ஸ்ரீசாபாரட்டிணம் அவர்கள் சுட்டுக்கொள்ளப்பட போகின்றார். அல்லது அவர்களுடைய நடைமுறைகள் ஏற்படுத்தப்படுகின்றன என்ற விடயங்கள் அனைத்தும் அப்பொழுது இந்தியாவில் இருந்த செல்வம் அடைக்கலநாதன் தற்பொழுது ரெலோவின் தலைவர் அவர்களுக்கு தெரியும் அதனை விளங்கப்படுத்தி சொல்லியும் அங்கிருந்து செல்லம் அடைக்கலநாதன் இங்கு வருவதற்கோ வந்தும் அடுத்தக்கட்ட ஒப்ரேசனை நடத்துவதற்கோ இந்தியாவினுடைய ரோ அனுமதிக்கவில்லை என்பது தான் உண்மை காரணம்.

என்னவென்றால் இவர்கள் ஜேர்மனிய நாடு அல்லது வேறு நாடுகளுடன் சென்று தமது அரசியலை மேற்கொள்ள இருந்த சமயத்திலே அதனை கண்டறிந்த இந்தியாவினுடைய ரோ ஏனைய இயக்கங்களை தமிழீழ விடுதலைப்புலிகளை வைத்தே அழித்து தமிழீழ விடுதலைப்புலிகளை தம் வசம் வைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு நிலைமை ஏற்பட்டது தவிர அது ஒரு சகோதர படுகொலை என்கின்ற ஒரு வரையறுக்குள் கூட அது உள்ளடக்கப்படாது என்பது தான் இன்றைய நிலைப்பாடாக இருக்கின்றது. ஆகவே இன்று நாம் பார்க்கின்ற பொழுது இதனை எல்லாம் இனப்படுகொலைக்குள்ளே நடந்து உள்ளது அவர்களும் அதை செய்தார்கள் என்ற விடயம் எல்லாம் தற்பொழுது தரப்பிலே பேசப்பட்டாலும் கூட இந்த ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலே குறிப்பாக 140000 அப்பாவி பொதுமக்கள் கொலை செய்யப்பட்டார்கள். 3000ற்கும் மேற்ப்பட்ட போராளிகள் அதே போர்களத்தில் மடிந்து இருக்கின்றார்கள். தமிழ் மக்களுடைய விடுதலையை நோக்கி இந்த நாட்டிலே அப்போராட்டம் இடம் பெற்றது. ஆகவே தமிழினத்திற்கு இழைக்கப்பட்ட துரோகத்தை இனப்படுகொலை இல்லை என்று கூறுகின்ற தமிழ் அரசியல் புத்திஜீவிகளில் ஒரு சில பேர் விரல்விட்டு எண்ணகூடியவர்களாக இருக்கலாம். அதாவது பிள்ளையான் அவர்கள் கூறியிருந்தார்கள். இனப்படுகொலை இடம்பெறவில்லை என்று அதுபோன்று டக்லஸ் தேவானந்தா கூறியிருந்தார். இனப்படுகொலை இடம் பெறவில்லை என்று ஆனால் கருணாஅம்மான் கூறியிருந்தார். யு.என்.பி அரசாங்கத்தால் நடத்தப்பட்ட இனப்படுகொலைகளை அதாவது விளாவாரியாக விபரித்து இருந்தார். ஆகவே இலங்கை அரசு இனப்படுகொலை செய்து இருக்கின்றது என்பதற்கு தற்போது இருக்க கூடிய முன்னாள் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டளை தளபதியாக இருக்க கூடிய கருணா அம்மான் ஒரு சாட்சியமாக இருக்கின்றார் என்பது இன்றைய காலக்கட்டத்திலே இருக்க கூடிய உண்மையாக இருக்கின்றது. அது மட்டுமன்றி வடமாகாணசபையிலே இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று மாகாணசபை அப்பொழுது தீர்மானித்து முன்னாள் முதலமைச்சர் சீ.வி. விக்னேஸ்வரன் அவர்கள் கூறியிருந்தார். இனப்படுகொலை இடம்பெற்றதற்கான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு சர்வதேச நாடுகளுக்கு அனுப்பிவைக்கபட்டதும் இங்கு சுட்டிகாட்டப்பட்ட விடயமாக இருக்கின்றது. அது மட்டுமன்றி ஈழப்போரின் இறுதிக்கட்டத்திலே இடம்பெறுகின்ற பொழுது சட்லைட் வழியாக படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றது. கொத்துக்குண்டுகள் வீசப்பட்ட படங்கள் எடுக்கப்பட்டிருக்கின்றது. விமானங்களிலே கொத்தனி குண்டுகள் வீசப்பட்ட விடயங்கள் அதுமட்டுமன்றி தரைவழியாக சென்று குண்டுகள் வீசப்பட்ட விடயங்கள் அனைத்துமே காணொலிகளாக இருக்கின்றது.

இலங்கையில் இடம்பெற்ற போர் போராக இடம்பெறாமல் மனித உரிமை மீறல்கள் மீறப்பட்ட ஒரு விடயமாக சர்வதேச ரீதியில் பார்க்கப்படுகின்றது. ஆகவே இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றதற்கு பல்வேறு ரீதியான காரணங்கள் ஆக்கபூர்வமாக இருக்கின்றது. இதிலே வடக்கிலும் கிழக்கிலும் தமிழ் தரப்பும் கூட பல்வேறு ஆவணங்களை சர்வதேச நீதிமன்றத்திலும் அது மட்டுமன்றி ஐக்கிய நாடுகள் சபையில் இருக்க கூடிய மனித உரிமை குழுக்களிடமும் கையளித்து இருக்கின்றார்கள். கையளித்த இந்த விடயம் தொடர்பான விசாரனைகள் முன்னெடுக்கப்படுகின்ற பொழுதிலும் இலங்கை அரசாங்கம் காலக்கெடு தேவை என்று கேட்டதன் அடிப்படையிலே அந்த விசாரனைகள் அனைத்தும் தமதமாக இடம்பெற்று வருகின்றது.

11ஆம் பக்கம் பார்க்க...

இரணியன்

# ரணிலும் கோட்டாபாயவும் ஒரே குட்டையில் ஊறிய இரு மட்டைகள் – அரியநேந்திரன்



**கேள்வி : இலங்கையின் தற்கால பொருளாதார நிலமை தொடர்பாக உங்களது கருத்து எவ்வாறு இருக்கின்றது.**

பதில் : கோட்டபாய ராஜபக்ஷ அவர்கள் 2019இல் ஜனாதிபதி ஆனதற்கு பிற்பாடு பொருளாதாரத்தில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் அதை தொடர்ந்து எரிபொருளுக்கான தேவைகள் கூட இருந்தற்கான காரணத்தினால் மக்கள் வீதிகளில் இறங்குகின்றார்கள். அந்த வீதியில் இறங்குகின்ற அதே நிலமையை வைத்து அவர்கள் பதவி விலக வேண்டும் என்ற பாரிய போராட்டத்தை சிங்கள மக்கள் மேற்கொண்டார்கள். குறிப்பாக உணவு பஞ்சம்.பொருளாதார பஞ்சம் ஏற்பட்டு அவரை வெளியேற்றியதற்கு பிற்பாடு ரணிலை பிரதமாராக்கி 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 134வாக்குகளைப்பெற்று ரணில் அவர்கள் வெற்றி பெற்றிருக்கின்றார்.

இப்பொழுது நிலமை என்ன வென்றால் சிங்கள மக்களின் முதல் இருந்த மனோ நிலமை இப்பொழு மாறப்பட்டிருக்கின்றது. எப்படி மாறப்பட்டிருக்கின்றது என்றால் அவர் கோட்டா கோகம என்று கூறிய மக்கள் இப்பொழுது அவரை வரவேற்கின்ற அளவுக்கு நிலமை வந்திருக்கின்றது.

இதில் தமிழ் மக்கள் பார்க்க வேண்டியது என்னவென்றால் சிங்களவர்களின் போராட்டம் என்பது எந்த காலத்திலும் தங்களுடைய தேவைக்காக தங்களுடைய வயிறு எரிகின்ற பொழுது அல்லது தங்களுக்கு ஒரு பஞ்சம் ஏற்படுகின்ற நேரங்களில் எதிர்க்கின்ற ஒரு மனப்பாங்கு தான் தொடர்ச்சியாக இருந்தது. ரணில் அவர்கள் வந்து அதற்கான ஒரு முன்னேற்பாட்டை எடுத்த பிறகு நிலமை மாறி இருக்கின்றது. ரணிலையும் வீட்டிற்கு போகுமாறு பல்கலைகழக மாணவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர். அதற்கான அறிக்கை விட்டார்கள். இன்றைக்கு அவர்கள் கூட கோட்டபாய ராஜபக்ஷவை வெளியில் அனுப்பியவாறு அவரை வெளியே அனுப்ப முடியாமல் இப்பொழு பார்க்கப்பட்டிருக்கின்றது. இதில் வெளிநாட்டுகளுடைய தலையீடுகள் அல்லது வெளிநாட்டு சக்திகள் இதில் இருந்தது என்றதும் நாங்கள் பார்க்க கூடிய ஒன்றாக இருக்கின்றது. குறிப்பாக எரிப்பொருள்.சமயல் எரிவாயு போன்றன பாரிய விடயமாக பார்க்கப்பட்டது. அதனால் தான் அதிகமான பெண்கள் வீதிகளுக்கு வந்தார்கள். நான் நினைக்கின்றேன் சமயல் எரிவாயுவை திட்டமிட்டு கோட்டாபாய ராஜபக்ஷ வை வீட்டுக்கு அனுப்புவதற்காக எதோ ஒரு வெளிநாட்டு சக்தி அதனுள் பயன்படுத்தப்பட்டதா என்ற கேள்வி இருக்கின்றது. ஏனென்றால் இப்பொழுது சமயல் எரிவாயு தாரளமாக கிடைக்கப்பெறுகின்றது. விலை குறைக்கப்படுகின்றது. இவ்வாறான நிலமை இப்பொழுது வந்திருக்கின்றது.

ஆகவே இந்த போராட்டங்களை நாங்கள் பார்க்கின்ற நேரம் கோட்டாபாய ராஜபக்ஷவை வெளியில் அனுப்பனும் என்ற ஒரு உறுதியான நிலைப்பாடு உள்நாட்டில் மாத்திரம் அல்ல சில வெளிநாட்டு சக்திகளும் அதை பயன்படுத்தி அதனை முறியடித்திருக்கின்றது. அதே சக்திகள் தான் தற்பொழுது ரணில் விக்கிரசிங்கவை ஜனாதிபதியாக அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது.

ஏனென்றால் ரணிலுக்கு எதிரான போராட்டங்கள் ஏற்ப்பட்டாலும் கூட இன்று அது அடக்கப்பட்டிருக்கின்றது. இதுக்கும் ஒரு வெளிநாட்டு சக்திகள் இருக்குமா என்ற சந்தேகம் மக்கள் மத்தியில் இருக்கின்றது.

நாங்கள் தமிழ் மக்கள் ஒன்றை புரிந்து கொள்ள வேண்டும் என்னவென்றால் சிங்களவர்கள் சிங்களவர்கள் தான் தங்களுடைய இனத்திற்காக போராடுகின்ற நிலமை இருக்கின்றது. இதில் வடகிழக்கில் உள்ள இளைஞர்கள் அங்கு போக வேண்டும் என்று பலர் கூறினார்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பில் இருப்பவர்களும் பலர் கட்டாயம் போக வேண்டும் என்று கூறினார்கள்.

ஆனால் நல்ல காலம் போயிருந்தால் பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு கீழ் பலர் கைது செய்யப்பட்டிருக்கலாம். அல்லது அந்த போராட்டம் திசைதிருப்பபட்டிருக்கலாம். அதிலிருந்து ஓரளவுக்கு கடவுள் நம்மள காப்பாற்றி இருக்கின்றார் என்று தான் நான் நினைக்கின்றேன்.

**கேள்வி : இதில் உண்மையாகவே இலஞ்ச ஊழல் நவாசஜிப் இந்தியாவிலோ கொரியாவிலோ இருந்த ஜனாதிபதி எல்லாம் அமைச்சர்கள் எல்லாம் ஊழல் செய்தால் அவர்கள் எல்லாரும் நாடுகடத்தப்படுவார்கள். திரும்பி அந்த நாட்டிற்குள் வருவதற்கான வாய்பில்லை அந்த நாடுகளிலே அவர்களுடைய மரணமும் இடம் பெற்றிருக்கின்றது. ஆனால் இந்த நிலமையிலே ஒரு ஊழல்வாதியாக சித்தரிக்கப்பட்ட ஜனாதிபதி மீண்டும் இந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசங்க தலைமையில் அழைத்தற்கான சிறப்புக்காரணங்கள் எதுவும் இருக்கும் என்று நினைக்கின்றீர்களா?**

பதில்: இதில் நீங்கள் சொல்லு கின்றவர்களும் இலங்கைக்கும் வித்தியாசம் இருக்கின்றது என்னவென்றால் நீங்கள் சொன்ன தலைவர்களை நாட்டாலே திறத்தப்பட்டவர்கள். இங்கு நாட்டால் திறத்தப்படவில்லை நாட்டில் உள்ள மக்களால் திறத்தப்பட்டவர். ஒரு மக்கள் கூட்டம் அவருக்கு சார்பாக வாக்களித்தவர்கள் தான் அவரை வேண்டாம் என்று சொன்னர்கள். அதே நேரத்தில் ஜனாதிபதியாக பதவி ஏற்க முந்தி பிரதமராக ஆட்சியில் இருந்த ரணில் விக்கிரமசிங்க அவரை நாட்டை விட்டு போக சொல்லி எக்காரணம் கொண்டும் சொல்லவிலலை எந்த வித அறிக்கையும் விடவும் இல்லை.

அதே நேரத்தில் இப்பொழுது அவர் வரபோகின்றார் என்று பலர் கூறிய போதும் இவர் என்ன கூறினார் என்றால் ரணில் விக்கிரமசிங்க தற்பொழுது இருக்கின்ற சூழ்நிலையில் நீங்கள் இப்பொழுது வரமால் வருகையை பிற்போடுமாறு பகிரங்கமாக கூறியிருந்தார். அதுவும் நீங்கள் வரகூடாது என்று கூறவில்லை கொஞ்சம் தாமதிக்க வேண்டும் என்று தான் கூறியருந்தார். அதன் மூலம் என்ன பார்க்க முடிகின்றது. அந்த நன்றி கடனை ரணில் விக்கிரமசிங்க காப்பாற்றி இருக்கின்றார் என்றார். அவரை காப்பாற்ற வேண்டிய தேவை ரணிலுக்கு இருக்கின்றது. அது தான் வெளிப்படையாக கூறாவிட்டாலும் மௌனமாக இருந்து அதனை ஆதரிக்கின்றார் என்று தான் கூற வேண்டும்.

**கேள்வி : இப்படியான சூழ்நிலையில் அடுத்த கட்ட நகர்வு மாகாணசபை தேர்தலை நோக்கியோ அல்லது உள்ளூராட்சி தேர்தலை நோக்கியோ , பாராளுமன்ற தேர்தல் நோக்கி நகர்ந்து ஒரு மக்கள் ஆணையுடன் பாராளுமன்றம் அமையும் என்ற நிலைப்பாடு அவ்வாறான அரசியல் மாற்றங்கள் நடைபெறும் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?**

பதில் : அரசியல் மாற்றங்கள் ஏற்படுவதற்கு என்னவென்றால் முதலாவது பாராளுமன்ற தேர்தல் நடத்த வேண்டும் என்று எல்லோரும் பகிரங்கமாக சொல்கின்றார்கள். ஜே.வி.பி சொல்லுது தமிழ் தேசிய கூட்டமைப்பு பேச்சாளர் சுமந்திரன் சொல்கின்றார். தமிழ்தேசியமக்கள்முன்னணிதலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் சொல்கின்றார். ஜே.வி.பி.அனுகுமார திசாநாயக்க சொல்கின்றார். எல்லாரும் சொல்கின்றார்கள். பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும் என்று ஆனால் வெளியில் தான் ஊடகங்களுக்கு சொல்கின்றார்கள்.

ஆனால் பாராளுமன்றத்தை கலைக்க கூடிய அதிகாரம் யாருக்கு இருக்கின்றது. பாராளுமன்ற உறுப்பினருக்கு தான் இருக்கின்றது. சரி இதில் சொல்லுகின்றவர்கள் யாராவது தனிநபர் பிரேரனையை கொண்டு வந்து பாராளுமன்றத்தை கலைப்பார்களா என்றால் இல்லை. அது வெற்றியளிக்கப்போவதுமில்லை இவர்களுக்கு தெரியும். அந்த பொதுநலத்திலும் சுயநலம் இருக்கின்றது. 225 உறுப்பினர்களில் யாராவது சொல்கின்றார்கள் பாராளுமன்றத்தை கலைக்க வேண்டும் என்று ஆனால் உள்நோக்கம் இருக்கும் கலைத்தால் அவர்கள் வரலாமா என்ற சந்தேகம் இருக்கும்.

ஆகவே இந்த பாராளுமன்றம் கலைக்கபட வேண்டிய அதிகாரம் 4வருடத்திற்கு பிறகு தான் ஜனாதிபதிக்கு கிடைக்கும். அதற்கிடையில் பாராளுமன்றத்தை கலைக்கும் சூழ்நிலையை எவருமே ஏற்ப்படுத்த மாட்டார்கள். என்ற தனிப்பட்ட கருத்து என்னவென்றால் இவ்வளவு இழுபறியோட இழுத்து இழுத்து இந்த பாராளுமன்றத்தை தக்கவைத்து செல்ல வேண்டிய சூழ்நிலை தான் இப்ப மக்கள் கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை பாராளுமன்றத்தை கொண்டு செல்லும் வாய்ப்பு தான் இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.



**நேர்காணல் : இரணியன்**



# பிராந்திய செய்திகள்



## சதுரங்கத்தில் (Chess) கல்முனை சாஹிரா கல்லூரி மீண்டும் சம்பியன்

கிழக்கு மாகாண கல்வி திணைக்கனத்தினால் 2022யிற்கான பாடசாலைகளுக்கிடையிலான மாகாணமட்ட விளையாட்டு போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் ஒரு அங்கமாக சதுரங்க (Chess) போட்டி கல்முனை சாஹிறா கல்லூரி காரியப்பர் மண்டபத்தில் செப்டம்பர் 4ம், 5ம் திகதிகளில் நடைபெற்று முடிந்தது.

இதில் 20வயதிற்குட்பட் ஆண்களுக்கான பிரிவில் கல்முனை ஸாஹிறா கல்லூரி 1ம் இடத்தைப்பெற்று சம்பியனாகவும், 17வயதிற்குட்பட்ட பிரிவில் இரண்டாவது இடத்தையும் பெற்றுக்கொண்டதோடு தேசியமட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டு பாடசாலைக்கும் வலயத்திற்கும் பெருமை தேடித்தந்துள்ளனர்.

மேலும் தனிதிறமைக்கான (Board Champion) தெரிவில் 20வயதிற்குட்பட்ட பிரிவில் ஏ.எச்.எம்.ஏ.சிமாம், எம்.எச்.எம். நுஸ்ரத் மற்றும் எம்.ஏ.ஏ.அத்தீப் ஆகிய மாணவர்களும், 17வயதிற்குட்பட்ட பிரிவில் எம்.ஏ.தமீம், எம்.இசட்.எம்..சனீப் ஆகிய மாணவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெற்ற மாணவர்களுக்கும், மாணவர்ளுக்கு பயிற்சியளித்த பயிற்றுவிப்பாளர் ஏ.எம்.சாகிர், மாணவர்களை வழிப்படுத்திய சதுரங்க பொறுப்பாசிரியர் எம்.வை.எம்.ரகீப், கல்லூரி முதல்வர் எம்.ஐ.ஜாபிர், ஆகியோருக்கு பாடசாலை சமூகத்தினர் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவிக்கின்றனர்.





## வவுனியா, பொன்னாவரசன்குளம் பகுதியில் வாள்வெட்டு

வவுனியா. பொன்னாவரசன்குளம் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் திருவிழாவின் போது ஆலயத்திற்குள் இடம்பெற்ற வாள்வெட்டு மற்றும் அடிதடி காரணமாக மூவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அன்று (09) இடம்பெற்ற இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

வவுனியா. பொன்னாவரசன்குளம் பகுதியில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயம் ஒன்றில் கடந்த 10 தினங்களாக வருடாந்த திருவிழா நடைபெற்று வருகின்றது. அன்று (08 ) மாலை திருவிழாவின் போது ஆலயத்தில் நின்ற சிலருக்கும், ஆலய பகுதிக்கு வந்த பிறிதொரு குழுவினருக்குமிடையில் கைகலப்பு ஏற்பட்டிருந்தது. அதன் தொடர்ச்சியாக அன்று (09.09) ஆலயத்தில் கொடி இறக்குவதற்கான பூசைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த போது அங்கு வந்த குழுவினருக்கும், ஆலயத்தில் நின்றவர்களுக்கும் இடையில் கைகலப்பு ஏற்பட்டதுடன், வாள் வெட்டுத் தாக்குதல்களும் இடம்பெற்றன. இச் சம்பவத்தில் காயமடைந்த 3 பேர் வவுனியா வைத்தியசாலையல் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆலய நிர்வாகத்தினர் உட்பட ஆண்கள், பெண்கள் உள்ளடங்கலாக 20 பேர் வரையில் நெளுக்குளம் பொலிசாரால் கொண்டு செல்லப்பட்டு அவர்களிடம் விசாரணைகளை முன்னெடுக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் இருந்து பொலிசாரால் வாள்களும் மீட்கப்பட்டுள்ளது. இதேவேளை, ஆலய தலைவரை விடுவித்த பின்னரே ஆலயத்தின் கொடி இறக்கப்படும் எனத் தெரிவித்து அப் பகுதியைச் சேர்ந்த மக்கள் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்திற்கு முன் திரண்டுள்ளனர். குறித்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் இடம்பெற்று வருவதாகவும் அதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் நெளுக்குளம் பொலிசார் தெரிவித்துள்ளனர்.




## நலன்புரி நன்மைகள் செலுத்துவது தொடர்பில் தகுதியானவர்களை கண்டறிதல் வேலைத்திட்டம்

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் கீழ் உள்ள நலன்புரி நன்மைகள் சபையின் நலன்புரி சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக சகல நலன்புரிக் கொடுப்பனவிற்கும் தகுதியான நபர்களை அடையாளம் காணுவதற்கான புதிய வேலைத்திட்டம் ஒன்றினை அரசாங்கம் நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளது.

இதனடிப்படையில், இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் நலன்புரி நிவாரண நன்மைக் கொடுப்பனவுக்கு தகுதியான நபர்களை அடையாளம் காணுவதற்கான முதற் கட்ட வேலை தற்போது இடம்பெற்று வருகின்றன. இரண்டாம் கட்டாக இறக்காமம் - 03 ஆம் கிராம சேவகர் பிரிவிற்கான நிகழ்வு வியாழக் கிழமை கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் இடம்பெற்றது.

பிரிவுக்குப் பொறுப்பான கிராம உத்தியோகத்தர் யூ.எல். அமீர் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், திட்டத்திற்கு பொறுப்பான சமூக சேவைப் பிரிவு பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எஸ்.எம் எஹியால் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ. றுமைஸ், சமூக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். ஜமீல் உட்பட சமூக சேவைப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்



## நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டால் நாளொன்றுக்கு 10 மணிநேர மின்வெட்டு !

நிலக்கரி தட்டுப்பாடு ஏற்பட்டால் நாளொன்றுக்கு சுமார் 10 மணித்தியாலங்களுக்கு மின்சாரம் தடைப்படுவதற்கு தயாராக இருக்க வேண்டும் என இலங்கை மின்சார சபை பொறியியலாளர் சங்கத்தின் தலைவர் அனில் ரஞ்சித் இந்துவர எச்சரித்துள்ளார்.

2022 ஒக்டோபருக்குள் CEB க்கு போதுமான நிலக்கரி கையிருப்பு கிடைக்காவிட்டால், மின்சார உற்பத்தியைக் குறைக்க வேண்டியிருக்கும் எனவும் தெரிவித்துள்ளார்.

தற்போது நீர் மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் அனல் மின் நிலையங்களில் இருந்து மின்சாரம் பெறப்படுவதாகவும், மழைக்காலம் முடிவடையும் போது இலங்கையில் நீர் மின் உற்பத்தியில் பாரிய சிக்கல்கள் ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், நுரைச்சோலை மின்நிலையத்தில் பழுதடைந்த ஜெனரேட்டரை மீள இயக்கி நவம்பர் 2022க்குள் தேசிய மின்கட்டமைப்பில் சேர்க்க முடியும் என இலங்கை மின்சார சபை நம்புவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


## பரீட்சைகள் திணைக்களத்தின் இணையதளத்தை ஹக் செய்த மாணவர் கைது: காலியில் சம்பவம்

பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை ஊடுருவிய (ஹக் செய்த) காலியைச் சேர்ந்த மாணவர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். மாணவர் இணையத்தளத்தை ஹக் செய்து, 2021 க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் தரவுகளை மீட்டெடுத்து, அதனை தனியான இணைய முகப்பு காட்சிப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் ஏறக்குறைய 270,000 மாணவர்களின் தரவுகளைத் திருடி அவர்களின் பெறுபேறுகளை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளம் போன்ற இணையத்தளத்தில் காட்சிப்படுத்தியுள்ளார். பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த ஐடி மாணவர்களைக் கொண்ட 5000 உறுப்பினர்களைக் கொண்ட தனியார் டெலிகிராம் குழுவில் இணையத்தள முகப்பு மற்றும் ஹக்கிங் குறித்த வழிமுறைகளை மாணவர் பகிர்ந்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் சைபர் குற்றப் புலனாய்வுப் பிரிவு, தந்திரோபாயக் குழுவிற்குள் நுழைந்து அவர்களின் நடவடிக்கைகள் குறித்து விரிவான விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப் புலனாய்வுப் பிரிவினர் குறித்த மாணவனின் இணைய முகப்பை ஹக் செய்த பின்னர், அதனை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக டெலிகிராம் குழுவிற்கு அவர் அறிவித்ததையடுத்து, அவர் கைது செய்யப்பட்டார். சந்தேக நபர் காலியில் உள்ள முன்னணி பாடசாலையொன்றில் தகவல் தொழில்நுட்பம் கற்கும் மாணவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். அந்த மாணவர் தான் பெற்ற அறிவைப் பயன்படுத்துவதற்காக அரசாங்க இணையத்தளத்தை ஹக் செய்துள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# சினிமா துளிகள்



## நடிகர் ஆர்யாவின் கேப்டன் படத்தின் முதல் நாள் வசூல் இவ்வளவு தானா?



ஆர்யாவின் கேப்டன் : நடிகர் ஆர்யா தமிழ் சினிமா ரசிகர்களால் கொண்டாடப்பட்ட, கொண்டாடப்படும் ஒரு சிறந்த பிரபலம். இதுவரை இவர் நடித்த படங்கள் சில தோற்றாலும் நிறைய படங்கள் செம ஹிட்டடித்து வருகின்றன.

கொரோனாவிற்கு பின் இவரது நடிப்பில் வெளியான சார்பட்டா பரம்பரை. டெடி போன்ற படங்கள் எல்லாம் செம ஹிட்

நேற்று சௌந்தரராஜன் இயக்கத்தில் ஆர்யா நடிப்பில் தயாராகி இருந்த கேப்டன் திரைப்படம் வெளியாகி இருந்தது. படம் சொல்லும் படியாக இல்லை என்பதால் விமர்சனத்திலும் நல்ல அடி வாங்கியது.

நடிகர் ஆர்யாவின் கேப்டன் படத்தின் முதல் நாள் வசூல் இவ்வளவு தானா? : யுசலய ஊயிவயைை குடைஅ டீழஒ முககைஉந ஊழடடநஉவழைெ

முதல் நாள் வசூல்: படத்தின் வசூலும் செல்லும் படி இல்லை. முதல் நாள் முடிவில் படம் ரூ. 1 முதல் ரூ. 1.5 கோடி வரை தான் வந்துள்ளதாக கூறப்படுகிறது.

## அதர்வா படத்தின் ரிலீஸ் திகதி அறிவிப்பு

சாம் ஆண்டன் இயக்கத்தில் நடிகர் அதர்வா நடித்துள்ள திரைப்படம் "டிரிக்கர்". இப்படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு அறிவித்துள்ளது. இயக்குனர் சாம் ஆண்டன் இயக்கத்தில் நடிகர் அதர்வா நடித்துள்ள திரைப்படம் "டிரிக்கர்". இந்த படத்தில் அதர்வாவுக்கு ஜோடியாக நடிகை தான்யா ரவிச்சந்திரன் நடித்துள்ளார்.

மேலும் இந்த படத்தில் அருண் பாண்டியன், சீதா, முனீஸ்காந்த், சின்னி ஜெயந்த், அறந்தாங்கி நிஷா, அன்புதாசன் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். பிரமோத் பிலிம்ஸ் தயாரித்துள்ள இந்த திரைப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். டிரிக்கர் ஆக்சன் திரில்லர் ஜானரில் உருவாகியுள்ள "டிரிக்கர்" படத்திற்கு இயக்குனர் பிஎஸ் மித்ரன் வசனம் எழுதியுள்ளார். சமீபத்தில் இந்த திரைப்படத்தின் டீசர் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. இந்நிலையில் "டிரிக்கர்" திரைப்படத்தின் ரிலீஸ் திகதியை படக்குழு அறிவித்துள்ளது. அதன்படி "டிரிக்கர்" திரைப்படம் செப்டம்பர் 23-ம் திகதி திரையரங்குகளில் வெளியாக உள்ளது.

## குழந்தை பெறுவதற்கு திருமணம் அவசியம் இல்லை – நடிகை தபு



இந்தியில் முன்னணி நடிகையாக வலம் வருபவர் நடிகை தபு. இவருக்கு இதுவரை திருமணம் ஆகவில்லை.

நடிகையான தபு தமிழில் காதல் தேசம், தாயின் மணிக்கொடி, இருவர், சினேகிதியே உள்ளிட்ட படங்களில் நடித்து ரசிகர்கள் மத்தியில் நீங்கா இடம் பிடித்தார்.

தெலுங்கு, கன்னடம் எனப் பல மொழிகளில் நடித்து வந்த இவர் இந்தி படங்களில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறார். தபு இவர் இதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை.

இந்நிலையில், நடிகை தபு குழந்தை பெறுவது குறித்து நிகழ்ச்சி ஒன்றில் பேசியுள்ள கருத்து சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அதில், "அனைத்து பெண்களைப் போல எனக்கும் தாயாக வேண்டும் என்று ஆசை உள்ளது.

திருமணத்திற்கும், குழந்தை பெற்றுக்கொள்வதற்கும் எந்த தொடர்பும் இல்லை. நான் குழந்தைக்குத் தாயாக வேண்டும் என்பதற்காக கட்டாயம் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற அவசியம் இல்லை.

வாடகைத் தாய் மூலமாகக் குழந்தை பெற்றுக் கொள்ள முடியும்" என்று கூறியுள்ளார். இந்த வீடியோ சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது

## இந்தி அறிமுகத்தில் சமந்தாவுக்கு 2 வேடம்!

நடிகை சமந்தா. இந்தியில் அறிமுகமாகும் படத்தில் 2 வேடங்களில் நடிக்க இருக்கிறார். 'சாகுந்தலம்'. 'யசோதா' படங்களை முடித்துவிட்ட சமந்தா. விஜய் தேவரகொண்டாவுடன் 'குஷி' படத்தில் நடித்து வருகிறார். தமிழ். தெலுங்கு. இந்தி உட்பட பான் இந்தியா முறையில் இந்தப் படம் உருவாகிறது. இந்தியில் வருண் தவானுடன் வெப்சீரிஸ் ஒன்றிலும் நடித்து வருகிறார்.

இதை 'தி பேமிலிமேன்'தொடரை இயக்கிய ராஜ் மற்றும் டீகே இயக்குகின்றனர். இதையடுத்து. ஆயுஷ்மான் குரானா ஜோடியாக அவர் நடிக்க இருக்கிறார்.

இந்தப் படம் மூலம் இந்தியில் அறிமுகமாகிறார். அமர் கவுசிக் இயக்கும் இதில் அவர் இளவரசியாகவும் பேயாகவும் 2 வேடங்களில் நடிக்க இருப்பதாகவும் இதற்கான 'வொர்க்ஷாப்'பில் அவர் பங்கேற்று வருவதாகவும் கூறப்படுகிறது.



தற்போது நடிகை த்ரிஷாவின் சிறுவயது புகைப்படம் ஒன்று சமூக வலைதளங்களில் வலம் வருகிறது. தனது சிறுவயதில் நடிகை த்ரிஷா பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடிய புகைப்படம் இதோ.



05ஆம் பக்க தொடர்ச்சி...

அந்த சித்திரவதை முகாமில் பாவித்த பொருள்கள் இப்போதும் அங்கிருக்கின்றன. (வாக்குமூலம் கொடுக்கப்பட்ட காலம்) அந்த முகாமில் இருந்த நபர் ஒருவரை பொல்லால் தாக்கி கொலை செய்து அங்குள்ள வீடு ஒன்றில் முன்னால் புதைத்தார்கள்.

**பாஸ் பெற வந்தோருக்கு ஏற்பட்ட கதி**

அரியாலையைச் சேர்ந்த பார்த்தீபன், சுதாகரன் என்ற இரு இளைஞர்கள் கைதடி சென்று வியாபாரம் செய்ய பாஸ் பெற்றுத் தருமாறு என்னிடம் கேட்டார்கள். இது குறித்து கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனாவிடம் கேட்டேன். அவர்களை முகாமுக்கு வருமாறும், அங்கு வைத்து பாஸ் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்தத் தகவலை அந்த இளைஞர்களிடம் தெரிவித்தேன். அவர்கள் முகாமுக்கு சென்றனர். மறுநாள் அந்த இளைஞர்களின் உறவினர்கள், அந்த இளைஞர்கள் இருவரும் இன்னும் வீட்டுக்குத் திரும்பி வரவில்லை என்று என்னிடம் தெரிவித்தனர். அந்த இளைஞருக்கு, கைதடியில் வியாபாரஞ் செய்ய அனுமதிக் கடிதம் வழங்குவதாகத் தெரிவித்த கப்டன் ஸ்ரீ ஜெயவர்தனா, லெட்டினனட் துடுகல்ல ஆகியோர் அந்த இளைஞர்கள் இருவரையும் தலைகீழாகக் கட்டித் தூக்கிவிட்டுத் தாக்கியதைக் கண்டேன். மறுநாள் இரு இளைஞர்களும் இறந்து விட்டனர்.

அரியாலை முகாமில் பணிபுரிந்த அப்துல் நஷார், ஹமீத் சமரசிங்க ஆகியோர் நன்றாகத் தமிழ் கதைப்பார்கள். அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றைக் காட்டுமாறு என்னிடம் கேட்டார்கள். இரவு நேரத்தில் அந்த வீட்டைக் காட்டினேன். அங்கு ஓர் ஆணும், பெண்ணும் இருந்தார்கள். "அந்த வீட்டின் சொந்தக்காரர் எங்கே?" என்று அவர்களிடம் கேட்டோம். "முன்வீட்டில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்" என்று பதில் அளித்தனர். அதையடுத்து கப்டன் லலித் ஹேவகேயும், அப்துல் நஷார் ஹமீத்தும் அந்த வீட்டுக்கு சென்றனர். அங்கிருந்த இளம் தம்பதியினரைக் கைது செய்தனர். அவர்களை முதலில் "சி" சித்திரவதை முகாமுக்குக் கொண்டு சென்றனர். பின்னர் இருவரையும் செம்மணியில் உப்பளப் பகுதிக்குக் கொண்டு சென்றனர். அவ்வாறு அவர்களைக் கூட்டிச் செல்லும்போது மண்வெட்டியை எடுத்துவரும்படி என்னிடமும், ஏ.எஸ் பெரேராவிடமும் கப்டன் லலித் ஹேவகே தெரிவித்தார். அதன்படி நாம் இருவரும் துப்பாக்கியுடன் மண்வெட்டியையும் கொண்டு சென்றோம். நான் செல்லும்போது கப்டன் ஹேவகே அந்தப் பெண்ணுடன் தனிமையில் நிற்பதைக் கண்டேன். அச்சமயம் அந்தப் பெண்ணின் உடலில் ஆடைகள் எதுவும் இருக்கவில்லை. பின்னர் அந்தப் பெண்ணின் கணவன் இருக்கும் இடத்துக்குப் பெண்ணை அழைத்து வந்தனர். என்னிடம் இருக்கின்ற மண்வெட்டியை வாங்கிய கப்டன் ஹேவகே இருவரின் தலையிலும் அடித்தார். அவருடன் இருந்த அப்துல் நஸார், ஹமீத், சமரசிங்க ஆகியோர் பொல்லுகளால் அவர்களைத் தாக்கினர்.

இருவரும் கீழே விழுந்துவிட்டனர். இருவரின் சடலங்களையும் எம்மை புதைக்கும்படி கூறிவிட்டு அவர்கள் சென்றுவிட்டனர். நாம் அந்தச் சடலங்களைப் புதைத்தோம். அந்த இடத்தை என்னால் அடையாளம் காட்ட முடியும். அரியாலைப் பகுதியைப் பற்றி எனக்கு நன்கு தெரியும். அங்குள்ள மக்களுடன் நன்றாகப் பழகியதால் என்னைப் பற்றி மக்கள் நன்றாகச் சொல்வார்கள். எனக்கு தமிழ் தெரியாததால் எனது சிவில் நிர்வாகப் பணிகளுக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த குணரத்தினம் என்பவரைப் பயன்படுத்தி வந்தேன். அரியாலைப் பகுதிக்கு நான் கடமைக்கு வர முன்பு அங்கு 50 பேர் காணாமல் போயிருந்தனர் என்று அறிந்தேன். அவர்கள் "சி" முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர் என்று கூறப்படுகின்றது.

கல்லூரி மாணவியான கிருசாந்தியின் சடலம் என்னிடம் புதைக்கப்படுவதற்காக ஒப்படைக்கப்பட்டபோது அந்தச் சமயம் அது கிருசாந்தியின் சடலம் என்று எனக்குத் தெரியாது. வழமையாக உயர் அதிகாரிகள் பொதுமக்களைக் கொலை செய்து விட்டு சடலத்தைப் புதைக்கும்படி என்னிடம் தருவார்கள். நான் அவற்றை புதைக்க ஏற்பாடு செய்வேன். கிருசாந்தி கொலையுடன் எனக்கு எந்தத் தொடர்பும் இல்லை, சடலத்தைப் புதைத்ததைத் தவிர. இந்தக் கொலை தொடர்பாக உயர் அதிகாரியின் அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருந்தனர். ஆனால் அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்படுவதற்கு முன்பும், பின்பும் இதனையே கூறினேன். கிருசாந்தி கொலை வழக்கில் முறைப்பாட்டுக்காரர்களின் வாக்குமூலங்கள் கவனத்தில் எடுக்கப்பட்டன. ஆனால் எதிரிகளின் வாக்குமூலங்கள் கவனத்தில் எடுக்கப்படவில்லை.

**கொலைப் பயமுறுத்தல்**

செம்மணியில் புதைகுழி இருப்பதாக நான் சாட்சியம் அளித்தால் எனது குடும்பம் கொலைசெய்யப்படும் என்று அச்சுறுத்தல் கடிதங்கள் வந்தன. அவற்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் கையளித்துள்ளேன். செம்மணி மற்றும் பகுதிகளில் உள்ள 10 மனிதப் புதைகுழி இடங்களை நான் அடையாளம் காட்டுவேன். தூக்குத் தண்டன் விதிக்கப்பட்ட ஏ.எம். பெரேரா ஐந்து இடங்களைக் காட்ட இருக்கின்றார். அதில் ஒன்றில் மட்டும் 25 முதல் 30 வரையான சடலங்கள் ஒன்றாகப் போடப்பட்டு புதைக்கப்பட்டுள்ளன. மற்றுமொரு கைதியான ஜெயதிலகவும் சில புதைகுழிகளைக் காட்டத் தயாராக இருக்கின்றார். என்னால் சடலங்கள் புதைக்கப்பட்ட மூன்று இடங்களைத் தற்சமயம் அடையாளங்காட்டமுடியாது என்று நினைக்கிறேன். இந்த சம்பவங்கள் நடந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டன. நான் வாக்குமூலம் அளித்து ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் அங்கிருந்து எலும்புகள் எடுக்கப்பட்டதாக அறிகிறேன். இதற்காகவே மண் மாதிரிகளை எடுக்குமாறு கோரினேன். படையினரையோ, நாட்டைக் காட்டிக்கொடுக்க நான் வாக்குமூலம் அளிக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட அநீதிக்கு நீதி கிடைக்கவும், சில இராணுவ அதிகாரிகளின் செயல்களை அம்பலப்படுத்தவுமே இந்த வாக்குமூலத்தை அளிக்கிறேன். எனக்கு இந்த நீதிமன்றத்தால் நீதி கிடைக்காமல் போனாலும் சர்வதேச நீதிமன்றம் மூலம் நீதி கிடைக்கும் என நினைக்கிறேன்.

**சோமரத்ன ராஜபக்ச சாட்சியாளர்கள் பற்றி**

எப்போதும் அதிகாரத் தரப்பினரின் குற்றங்கள் கண்டுகொள்ளப்படுவதில்லை. அவர்களின் குற்றங்களைச் சுமக்க ஒரு தொகுதி தரப்பினர் தகுதி பெற்றவர்களாக இருக்கின்றர். கிருசாந்தி படுகொலையிலும் அதுவே நடந்தது.

கிருசாந்தி வன்புணர்வுக்குள்ளாக்கப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டுவிட்டார் என்ற விடயம் தெரியவந்தவுடன் யார் தலையிலாவது அந்தக் குற்றத்தை கட்டிவிட வேண்டிய தேவை அப்போது அதிகாரத்திலிருந்தவர்களுக்கு எழுந்தது. அதில் முதலில் சிக்கியவர் சோமரத்ன ராஜபக்ச. அவரளித்த வாக்குமூலங்களில் தன்னை ஒரு கீழ்நிலை துருப்பினனாகவும், தமிழர்கள் படும் இன்னல்களைப் புரிந்துகொண்டவராகவும் வெளிப்படுத்தியிருக்கின்றார். அதிலிருக்கின்ற உண்மை, பொய்களுக்கு அப்பால் ஒரு சிங்கள துருப்பினன், நடந்து முடிந்த படுகொலையின் சாட்சியமாக மாறியிருந்தமை வரலாற்றில் குறிப்பிடவேண்டிய ஒன்று.

அதனால்தான் என்னவோ சோமரத்த ராஜபக்ச ஏனைய துருப்பினர் போலல்லாமல் அதிக தண்டனையை அனுபவிக்க வேண்டிய நிலையை எதிர்கொண்டார். சோமரத்ன ராஜபக்ச கொடுத்த வாக்குமூலத்தின் பின்னர் அவர் எதிர்கொண்ட பாதிப்புகள் அதிகம். சிறைக்கூடத்துக்குள்ளேயே தாக்குதலுக்கு இலக்கானார். அவரது குடும்பம் துப்பாக்கி குறிகளுக்கு முன்னதாக நிறுத்தப்பட்டது. இவ்வளவு அச்சுறுத்தல்களையும் எதிர்கொண்டு சாட்சிசொன்னார் அந்தச் சிங்களவர். ஆனால் ஒரேயொரு சாட்சியத்தோடு அடக்கி வாசிக்கப் பழகிக் கொண்டார்.

இவருடன் சேர்ந்து மேலும் எட்டுப் படையினர் கைதாகியிருந்தனர். ஜெயசிங்க, பிரியதர்சன பெரேரா, அல்விஸ், முத்துபண்டா, ஜெயதிலக, இந்திரகுமார நிஸாந்த என்பர்களே கைதுசெய்யப்பட்டிருந்தனர். இதில் இருவர் தப்பியோடியிருக்க அல்விஸ் மூளை மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டு இறந்துபோனார். மிகுதியானவர்களுக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. அத்தோடு கைது செய்யப்படவர்கள் இனங்காட்டிய இராணுவ உயரதிகாரிகள் பின்னர் விசாரிக்கப்பட்டார்களா என்பதற்கான ஆதாரங்கள் மிகக்குறைவு. அதில் சம்பந்தப்பட்ட சில அதிகாரிகள் போரில் இறந்துவிட்டனர் என்றும் காயப்பட்டனர் என்றும் செய்திகள் வந்தன. பெரேரா, ஜெயசிங்க போன்றோர் ஏனைய இடங்களிலும் மனித புதைகுழிகள் இருப்பதாக தெரிவித்திருந்தனர். அவர்களிடமும் இந்தப் படுகொலை தொடர்பிலான ஆதாரங்கள் இருந்தன.

ஆனால் அவர்களின் கதைகள் பெரியளவில் கவனத்தில் எடுக்கப்படவில்லை. சோமரத்ன ராஜபக்ச காட்டிய இடங்களும், அவர் கொடுத்த வாக்குமூலத்துக்கு அமைவாகவுமே புதைகுழிகள் தோண்டப்பட்டன. இங்கு கைதாகிய இராணுவத்தினர் அரியாலைப் பகுதியை சேர்ந்தவர்கள் மட்டுமே. இந்தப் பகுதியில் நடந்த காணாமல் போதல், கைதுகள் தொடர்பிலான ரகசியங்கள் மட்டுமே அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பிருக்கின்றது. யாழ்ப்பாணத்தில் ஏனைய பகுதிகளில் பரவலாக நடத்தப்பட்ட சட்டவிரோத கைதுகள், கடத்தல்கள், காணாமல் போதல்கள் பற்றிய தகவல்கள் அவர்களுக்குத் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. ஒருவர் கொடுத்த வாக்கு மூலத்திலேயே இவ்வளவு தொகையானவர்கள் கொன்று புதைக்கப்பட்டிருக்கின்றனர் என்பது தெரியவந்தது என்றால் அந்தக் காலத்தில் பணியாற்றிய ஒவ்வொரு துருப்பினருக்கும் எத்தனை குழிகள் தெரிந்திருக்கும் அங்கு என்ன நடக்கின்றது என்று யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

இவர்களின் கைதுகளும் குற்ற ஒப்புதல்களும் இலங்கை இராணுவத்தின் மெய்வடிவத்தை வெளிச்சமிட அப்போது போதுமான செய்தியாக இருந்தது. ஆனாலும் வழமை போலவே இலங்கையின் அரச தரப்பு இராணுவத்தின் குற்றங்களை உடனடியாக ஒப்புக்கொள்ள விரும்பவில்லை. கால நீடிப்பின் ஊடாக அநீதியை வழங்கி விட முடியும் என்ற அதீத நம்பிக்கையில் செயற்பட்டது. அது சாத்தியமும் ஆனது. 1996 ஆம் ஆண்டில் வெளிச்சத்துக்கு கொண்டுவரப்பட்ட செம்மணி விவகாரம் 1999 ஆம் ஆண்டின் நடுப்பகுதிவரை இழுபட்டது. இந்த மனிதப் புதைகுழியில் கிட்டத்தட்ட 400 பேர் புதைக்கப்பட்டிருந்தனர் என்று குற்றமிழைத்தவர்கள் ஒப்புக்கொண்டனர். அந்தக் காலப்பகுதியில் யாழில் 600 பேர் காணாமல் போயிருந்தனர். அவர்கள் அனைவருக்கும் என்ன நடந்தது என்பதை இன்று வரை அறிய முடியவில்லை. சிலருக்கு இறப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

மிகுதியான இளைஞர், யுவதிகளைத் தேடும் பணியை அவர்களின் பெற்றோர் இன்னமும் கைவிடவில்லை. இந்தக் கைதுகளுக்கும் காணாமல் போதல்களுக்கும் பின்னணியில் சொல்லப்படும் காணரம் புலிகள் அல்லது புலிகளுடன் தொடர்புபட்டவர்கள் என்பதே. ஆனால் காணாமல் போனவர்களில் பலர் வெறும் அப்பாவிகள் என்பதை ஊரும், உறவுகளும் அறிந்தே வைத்திருக்கினர்.

1996 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இராணுவத்தின் முழுக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்ட யாழ்ப்பாணத்தினுள் பெருமளவிலான விடுதலைப் புலிகள் ஊடுருவி விட்டனர் என்ற சந்தேகம் இளைஞர் கைதுகளுக்கு காரணமாக சொல்லப்பட்டது. இந்த சந்தேகம் பொய்யானதாக இருந்தபோதிலும் அந்த ஆண்டில் முல்லைத்தீவில் இழக்கப்பட்ட 1200 உயிர்களுக்கு பதிலீடு யாழ்ப்பாணத்தில் சரிசெய்யப்பட்டது என்பது தமிழர்களுக்குத் தெரிந்தே இருந்தது. யாழ்ப்பணத்தை இழந்த புலிகள் உடனடியாக ஓர் இராணு வெற்றியை அடைய முயன்றனர். முல்லைத்தீவு இராணுவத் தளம் மீதான தாக்குதல் யாழ்ப்பாண இழப்பைச் சமன்செய்தது. அத்துடன் இராணுவத்தரப்பிற்கு ஆளனி மற்றும் படையப் பொருள்கள் ரீதியிலான பேரிழப்பையும் இந்தத் தாக்குதல் ஏற்படுத்தியது. அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் தனது வேட்டையை இராணுவம் ஆரம்பித்தது. இனப்படுகொலையை ஒத்த இந்த வகை பலியெடுப்பு யாழ்ப்பாணத்தில் நடந்து முடிந்தது. அதன் விளைவே செம்மணி மனிதப் புதைகுழி.

புதைகுழிகள் அடையாளம் காட்டப்பட்ட பின்னரும் அப்போதிருந்த இலங்கை அரசு பெருங்கால நீடிப்பை திட்டமிட்டு உருவாக்கியிருந்தது. உள்நாட்டு அரசியல் கட்சிகளும், பாதிக்கப்பட்ட மக்களும், மனித உரிமை அமைப்புக்களும், சர்வதேச மன்னிப்புச் சபையும் முன்வைத்த கோரிக்கைகளுக்கும், போராட்டங்களுக்கும் நீண்டகாலமாக அரசு பதிலளிக்கவில்லை. விசாரணை, நீதிமன்றத்தீர்ப்பு, குற்றவாளிகளின் உடல்நிலை பாதிப்பு, சரியான நிபுணர்கள் இல்லை, தோண்டுவதற்குரிய காலநிலை இன்னும் வரவில்லை எனப் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன. ஆயினும் சர்வதேச மன்னிப்புச் சபையும், பிற ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளும் பிரயோகித்த அழுத்தத்திற்கு இலங்கை அடிபணிந்தது. அதைவிட கிருசாந்தியின் சார்பில் வழக்கை முன்நின்று நடத்திய குமார் பொன்னம்பலம் போன்ற சட்டத்தரணிகள் அப்போதைய ஆளுந்தரப்பிடம் செல்வாக்கு செலுத்தக்கூடியவர்களான இருந்தனர். நேரடித் தொடர்புகளை கொண்டிருந்தவர்களாக இருந்தனர். அரசிடம் அவர்களுக்கு இருந்த செல்வாக்கின் காரணமாகவும் இந்த விடயத்தை மூடிமறைக்க முடியவில்லை. விசாரணை குழுக்கள் தொடர்ச்சியாக இயங்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இந்தக் கூட்டு அழுத்தங்களின் விளைவாக 1999 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 10 ஆம் திகதி செம்மணி மனிதப் புதைகுழிகளைத் தோண்டும் படணி ஆரம்பமாகியது. அமெரிக்க நிபுணர்கள், சர்வதேச மன்னிப்புச் சபை, ஏசியா பௌண்டேசன் அதிகாரிகள், துறைசார்ந்த பேராசிரியர்கள், பொதுமக்கள், உள்ளூர் அதிகாரிகள், அமைப்புகள், சர்வதேச ஊடகங்கள் கவனிப்பில் முன்னிலை வகித்தன. சோமரத்ன ராஜபக்ச முதலில் ஒரு புதைகுழியைக் அடையாளம் காட்டினார். முதல் கட்டமாக அவர் காட்டிய இடத்திலிருந்து 2 எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளில் ஒன்றில் கைகள் இரண்டும் கட்டப்பட்டிருந்தன. மற்றைய எலும்புக் கூடு சேதம் அமைந்திருந்ததால் கைகள், கண்கள் கட்டபட்டிருந்தனவா என்பதை அறிய முடியவில்லை. கண்கள், கைகள், கட்டப்பட்ட நிலையில் மீட்கப்பட்ட எலும்புக் கூட்டின் மண்டையோட்டுப் பகுதியில்காணப்பட்ட ஆழமான சிதைவுகள் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்டவையாக இருக்கலாம் என்று கணிக்கப்பட்டனர். இரண்டு எலும்புக்கூட்டிலும் அடி காயங்கள் தாராளமாகக் காணப்பட்டன. ஒரு எலும்புக் கூடு நிமிர்ந்தும் மற்றையது பக்கவாட்டிலும் படுத்திருப்பது போன்று போடப்பட்டிருந்தன. இரண்டு எலும்புக் கூடுகளுக்கும் நடுவில் சிலிப்பர் கட்டைகள் காணப்பட்டன.

இந்த எலும்பு மீட்பு சுவாரஸ்யங்கள் நீடிக்கவில்லை. இரண்டு எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டதோடு புதைகுழி தோண்டும் படலம் இடைநிறுத்தப்பட்டது. தமது பிள்ளைகளின் எலும்புகளைத் தேடி செம்மணி புதைகுழிக்கு வந்திருந்த பெற்றோர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர்.

இந்த எலும்பு ஆதாரங்கள் யாழ்ப்பாணத்தை மனிதப் புதைகுழியின் நகராக்கியது. தென் ஆசியாவிலேயே அதிகளவாக மக்கள் கொன்று புதைக்கப்பட்ட இடமாக செம்மணி புதைகுழியை ஊடகங்கள் அடையாளப்படுத்தின. புதைகுழியிலிருந்து மீட்கப்பட்ட எலும்புக் கூடுகளுக்கு மறுநாளே உரிமைகோரல்களும் யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியிருந்து எழுந்தன. அரியாலையில் இருந்த இயந்திர திருத்தகம் ஒன்றில் வேலை செய்துகொண்டிருந்த வேளையில் காணாமல் போன இரு இளைஞர்களின் எலும்புகளாக அவை இருந்தன. 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இருவரும் வேலை முடித்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது இராணுவத்தால் கைதாகிப் பின்னர் காணாமல் போயிருந்தனர்.

11ஆம் பக்கம் பார்க்க...

10ஆம் பக்க தொடர்ச்சி...

அதன் பின்னர் மீட்கப்பட்ட எலும்புக் கூடுகள் பற்றிய அறிக்கைகள் அடிக்கடி வெளியாகின. பல்வேறு தரப்பட்ட அரசியல் கட்சிகளும், உள்ளூர், சர்வதேச அமைப்புகளும் அதில் அடக்கம். ஏனைய சிப்பாய்களையும் செம்மணிக்கு கூட்டிவந்து மனிதப் புதைகுழிகளை அடையாளம் காட்டச் செய்ய வேண்டும் என்ற முடிவும் எடுக்கப்பட்டது. பக்கச்சார்பற்ற, நீதியான, விசாரணைகளை மேற்கொள்வதோடு, அனைத்துப் புதைகுழிகளையும் தோண்டி உண்மையைக் கண்டறியுமாறு செம்மணி வந்து திரும்பிய சர்வதேச பிரதிநிதிகள் கொழும்பில் அறிக்கைவிட்டனர். அதன் பின் அவர்களும் வாய்திறக்கவில்லை. பின்னைய நாள்களில் இந்தச் செய்திகளின் சூடு எப்படியோ குறைந்தது.

விசாரணைக் குழுக்கள் அடிக்கடி வருவதாகவும், செப்டெம்பர் 6 ஆம் திகதி மறுபடியும் தோண்டப்படும் எனவும் ஓர் அறிக்கை அரச தரப்பிலிருந்து விடப்பட்டது. அதன்படி குறித்த திகதியில் மீண்டும் தோண்டும் பணிகள் ஆரம்பமாகின. அமெரிக்க பிரதிநிதிகள் எலும்பு மீட்புப் பணிகளைக் கண்காணிக்க வந்திருந்தனர். இறுதியில் முடிவுகள் எதுவும் காட்டாமலேயே இந்த விவகாரம் மந்தமாகியது. பின்னர் எதிராளிகளின் வேண்டுகோளுக்கிணங்க வழக்கு விசாரணை அனுராதபுரம் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது. அதன் பின்னர் நடந்த புதைகுழி தோண்டலில் அதிகளவில் சேதமடைந்திராத எலும்புக்கூடுகள் இரண்டை மறுபடியும் நிபுணர்கள் கண்டுபிடித்தனர். சாட்சியாளர்கள் காட்டிய சில இடங்களில் எலும்புக் கூட்டுத் தடயங்கள் எதுவும் இருக்கவில்லை. ஆனால் அவை யாருடையவை என்பதை அடையாளம் காண முடியவில்லை.

மூன்றாம் நாள் கண்டி வீதி - நல்லூர் நாயன்மார்கட்டு சந்திவீதி மூலையில் இருந்த இராணுவக் காவலரணின் பின்புறத்தில் மூன்று எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன. அருகருகே புதைக்கப்பட்ட நிலையில் ஆடைகள் ஏதுமற்ற நிலையில் ஓர் இளம் பெண் மற்றும் ஆண் ஆகியோரின் எலும்புக் கூடுகளாக அவை இருந்தன. கொழும்புத் துறை பகுதியில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது கைது செய்யப்பட்ட தம்பதியினரின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாம், அவற்றின் மண்டையோடுகள் பிளந்து காணப்பட்டன. தலையில் அடித்துத் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட வெடிப்பாக அவையிருக்கலாம் என சட்ட மருத்துவத்துறை நிபுணர் பேராசிரியர் நெரியெல்ல குறிப்பிட்டிருந்தார். தொடர்ந்து புதைகுழி தோண்டும் பணிகள் நடந்தன.

20 பேரை புதைத்தனர் என்று சோமரத்ன ராஜபக்ச தெரிவித்திருந்த இடமும், கிணறும் தோண்டப்பட்ட போதிலும் அங்கு எலும்புக் கூடுகள் எவையும் இருக்கவில்லை. இதனால் சோமரத்ன மறுபடியும் செம்மணிக்கு அழைத்துவரப்பட்டார். அப்போது அவர் சொன்ன பதிலோடு, தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டன.

"செம்மணி மற்றும் அரியாலைப் பகுதிகளில் மனிதப் புதைகுழிகள் உள்ள சரியான இடங்களையே நான் அடையாளம் காட்டினேன். அந்தப் புதைகுழிகளை தோண்டியபோது அங்கு சடலங்கள் காணப்படாததையிட்டு நான் அதிர்ச்சியடைகிறேன்" அதுவரையில் செம்மணியில் இருந்து 15 வரையிலான சடலங்களின் எலும்புகள் மீட்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. அத்தோடு தோண்டும் பணிகள் நிறுத்தப்பட்டன. அதே வருடத்தில் டிசம்பர் 6 ஆம் திகதி இதுவரையில் செம்மணியில் நடத்தப்பட்ட புதைகுழி ஆய்வு தொடர்பிலான அறிக்கை ஒன்று வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. காலநிலை மாறியது. களநிலை நிலவரங்கள் மாறின. அடுத்த மழையிலும், வன்னியில் எழுந்த போர் அலைகளிலும் எல்லாமே மறக்கப்பட்டன. 2000 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னரான ஆட்சி மாற்றமும் சமாதானமும் இந்தப் பெரியளவிலான மனிதப் படுகொலையை மறக்கச் செய்தன.

சோமரத்னவின் மரணதண்டனை பற்றிய செய்தியோன்று கடந்த வருடத்துக்கு முற்பகுதியில் வெளியான செய்தியொன்றில் படித்ததாக நினைவு. அவரோடு கைதானவர்கள் எங்கே? என்ன நடந்தது போன்ற கேள்விகளும், செம்மணியில் புதைக்கப்பட்டவர்களின் நினைவைப் போல மறந்தேபோயிற்று. உலகளவில் நிரூபிக்கப்பட்ட இந்தக் குற்றம் அல்லது இனமொன்றை கூட்டுப் படுகொலை செய்தமைக்கான ஆதாரம் செம்மணி புதைகுழிக்குள்ளும் வருகின்றது. இதில் ஈடுபட்டவர்கள் சர்வதேச குற்றவியல் மன்றங்களில் விசாரிக்கப்படுவதும் தண்டனைக் குள்ளாவதும் அண்மைக்காலம் வரை நடந்துகொண்டேயிருக்கின்றது.

ஆனால் உலகின் கண்முன்னே, அமெரிக்காவின் கண்முன்னே சாட்சிபூர்வமாக நிரூபிக்கப்பட்ட செம்மணி மறக்கப்பட்ட ஒன்றாகிவிட்டது. இது இலங்கையில் இடம்பெற்ற உள்ளக விசாரணையொன்றின் நம்பிக்கைத் தன்மையினையும், பொறுப்புக்கூறும் போக்கையும் எடுத்துக்காட்டவும் கைவசமுள்ள சிறந்த ஆதாரங்களில் ஒன்று.

6ஆம் பக்க தொடர்ச்சி...

இந்த கட்டத்திலே இந்த இனப்படுகொலைக்கான ஒரு நீதி தமிழ் இனத்திற்கு கிடைக்க வேண்டும். அது மட்டுமன்றி கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்டோருக்கான விடுதலையை பெற்றுதர வேண்டும். வடகிழக்கு இணைக்கப்பட்ட ஒரு சுயாட்சி தமிழ் மக்களுக்கு வழங்கப்பட வேண்டும். ஆயுத முறையில் இல்லாவிட்டாலும் அஹிம்சை முறையிலான ஒரு நிலைப்பாட்டை உடனடியாக இந்த அரசாங்கம் அமுல்படுத்துவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும். குற்றம் இழைத்தவர்களுக்கு தண்டை கொடுக்க இந்த அரசாங்கம் முன்னெடுக்கின்ற பொழுது தான் இந்த தமிழினமும் சிங்கள இனமும் நிம்மதியாக இந்த நாட்டிலே வாழ கூடிய ஒரு சூழல் ஏற்ப்பட்டு பூகோள ரீதியாக இந்த நாடு பிடிப்பட்டிருக்கின்ற ஒரு சூழலக்குள் இந்த பொருளாதார பிரச்சனையில் இருந்து இலங்கை அரசு மீள்வதற்கான ஒரு சமிஞ்சையாகவே இதனை நாம் பார்க்கின்றோம்.

ஆகவே இந்த அரசாங்கமானது கடத்தப்பட்டு காணமல் ஆக்கபட்ட விவகாரங்களிலே அவர்கள் எவ்வாறான விடயங்களை கையாளுகின்றார்கள். இந்த நாட்டிலே இனப்படுகொலை ஒன்று இடம்பெற்றது அதற்கான தீர்வை சர்வதேச நீதிமன்றம் ஊடாக அதனை நடைமுறைப்படுத்தி அதற்கான தீர்வினை பெற்றுக்கொடுப்பதற்கான முன்னெடுப்புக்களை தமிழ் தரப்பு வலியுறுத்தி செயற்ப்படுத்த வேண்டும்.

# இலங்கையில் 6 மில்லியனுக்கும் அதிக மக்கள், உணவு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாக உலக உணவு திட்டம் அறிக்கை வெளியிட்டுள்ளது

இலங்கையின் உணவு பாதுகாப்பற்ற நிலைமை தொடர்பில் உலக உணவு திட்டம் வெளியிட்டுள்ள புதுபிக்கப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையில், இலங்கையில் பொருளாதார நெருக்கடிகள் காரணமாக 6 மில்லியனுக்கும் அதிக மக்கள், உணவு பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர்.

இலங்கை மக்களின் வாழ்க்கை செலவு அதிகரிப்பானது ஆரோக்கியமான மற்றும் போதுமான உணவின் அணுகலைக் கட்டுப்படுத்துவதாக உலக உணவு திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை சுதந்திரம் பெற்றதன் பின்னர் மிக மோசமான பொருளாதார நெருக்கடியை அனுபவித்து வருகிறது. இது பல வருட வளர்ச்சி முன்னேற்றத்தை அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளது.

இந்நிலைமையானது, ஐக்கிய நாடுகள் சபையின் 2030 நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கான, நாட்டின் திறனை கடுமையாக குறைமதிப்பிற்கு உட்படுத்துகிறது.

6 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் அதாவது சுமார் 30 சதவீத மக்கள் தற்போது உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளனர் மற்றும் அவர்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது.

குறைவடைந்துள்ள உள்நாட்டு விவசாய உற்பத்தி, அந்நியச் செலாவணி இருப்பு பற்றாக்குறை மற்றும் ரூபாவின் பெறுமதியில் ஏற்பட்டுள்ள வீழ்ச்சி ஆகியவை உணவுப் பற்றாக்குறை மற்றும் வாழ்க்கைச் செலவில் அதிகரிப்பை ஏற்படுத்தியுள்ளன. இது மக்களின் ஆரோக்கியமான மற்றும் அதிக உணவுக்கான அணுகலைக் கட்டுப்படுத்துகிறது.

பொருளாதார நெருக்கடியானது குடும்பங்களை பசி மற்றும் வறுமையில் தள்ளியுள்ளது. சிலர் முதல் முறையாக வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ளடங்கியுள்ளனர். உலக வங்கி மதிப்பீடுகளுக்கமைய இது சுமார் அரை மில்லியன் மக்களைஉள்ளடக்கியதாகக் காணப்படுகிறது.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் சமீபத்திய மதிப்பீட்டின்படி, 86 சதவீத குடும்பங்கள் மலிவான, குறைவான சத்துள்ள உணவை வாங்குகின்றனர், குறைவாக சாப்பிடுகின்றனர் மற்றும் சில சமயங்களில் உணவை முற்றிலுமாக தவிர்த்து வருகின்றனர். பொருளாதார நெருக்கடி மற்றும் தொற்றுநோய்க்கு முன்னர், இலங்கை முழுவதும் ஊட்டச்சத்து குறைபாடு விகிதம் ஏற்கனவே அதிகமாக இருந்தது.

கொவிட்-19 தொற்றுநோய்க்கு முன்னர், மற்ற நடுத்தர வருமான நாடுகளை விட இலங்கைப் பெண்களும் குழந்தைகளும் ஊட்டச்சத்து குறைபாட்டால் மிகவும் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

5 வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 17 சதவீதமானோர் வளர்ச்சி குன்றியதால் மிகவும் குட்டையாக இருந்தனர் மற்றும் 15 சதவீதமானோர் உயரத்துடன் ஒப்பிடும் போது மிகவும் உடல் மெலிவாகக் காணப்பட்டனர். தற்போதைய பொருளாதார நெருக்கடி இதை மேலும் மோசமாக்கும்.

கூடுதலாக, வரட்சி, வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற காலநிலை மாற்றங்கள் உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின்மையை அதிகரிக்கின்றன.

உலக உணவுத் திட்டம் 1968ஆம் ஆண்டு முதல் இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து ஊட்டச்சத்து குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கும், குடும்பங்களுக்கு உணவு கிடைப்பதற்கு ஆதரவளிப்பதற்கும், சிறு விவசாயிகளின் உற்பத்தித்திறன் மற்றும் வருமானத்தை மேம்படுத்துவதற்கும் செயற்பட்டு வருகிறது.

இவ்வாண்டு ஜூன் மற்றும் டிசம்பருக்கு இடைப்பட்ட காலகட்டத்தில் உணவுப் பாதுகாப்பு, ஊட்டச்சத்து மற்றும் வாழ்வாதாரங்கள் ஆபத்தில் உள்ள 3.4 மில்லியன் மக்களுக்கு ஆதரவளிக்க உலக உணவு திட்டம் அதன் செயல்பாடுகளை விரிவுபடுத்துகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# பல்சுவை கதம்பம்



## சருமத்தின் ஈரப்பதத்தை தக்கவைக்கும் அற்புத மூலிகை!

சோற்றுக் கற்றாழையைச் சித்த மருத்துவத்தில் 'குமரி' என அழைப்பர். காய கல்பத்தில் அதுவும் ஒரு மூலிகையாகச் சேர்க்கப்படுகின்றது. அதன் நடுப்பகுதியைப் பிளந்து அதன் கசப்பான சாற்றை எடுத்துச் சற்றே அலசிப் பின் மோரில் கலந்து தினம்தோறும் உண்டு வந்தால், அல்சர் போன்ற நோய்கள் குணமாகும். மேலும் உடலில் இளமைத் தன்மை அதிகரிக்கும்.

கற்றாழை சாறு சருமத்தின் ஈரப்பதத்தை சமன் செய்வதுடன் சரும நோய்களையும் குணப்படுத்துகிறது. முகத்திலுள்ள கரும்புள்ளிகள் தழும்புகள் வெயில் பாதிப்புகள் உலர்ந்த சருமம் என சரும நோய் எதுவாக இருந்தாலும் சிறிது கற்றாழைச் சாறை தினமும் தடவி வர நல்ல குணம் கிடைக்கும்.

ஆண்கள் சவரம் செய்யும் பொழுது ஏற்படும் கீறல்கள் காயங்களுக்கும் உடனடி நிவாரணம் பெற கற்றாழைச் சாறை பயன்படுத்தலாம். இதன் சாறை இரவு வேளையில் முகத்தில் தேய்த்து காலையில் வெந்நீரால் கழுவ முகத்தில் உள்ள கருமை நீங்கி முகம் பொலிவு பெறும்.

தோலோடு கற்றாழையை பச்சை மஞ்சளோடு சேர்த்து மைய அரைத்து முகம் கழுத்து கை கால்களில் தடவி சில மணி நேரத்துக்குப் பின்னர் வெந்தய நுரை கொண்டு தேய்த்து குளித்தால் உடல் பளபளப்பாகும். தோல் நோய் வராது. கற்றாழை கழியைத் தலை முடியில் தடவி சீவினால் மடி கலையாது. தலையின் சூடும் குறையும். உடல் குளிர்ந்து காணப்படும்.

சோர்வுற்ற கால்களுக்கு கற்றாழை சாறைத் தடவலாம். சருமத்தில் ஏற்படும் எரிச்சலை அடக்கி சருமத்திற்கு குளிர்ச்சி தரும். திசுக்களைப் புதுப்பித்து ஈரப்பதம் அளிக்கும். எல்லா வகை சருமத்திற்கும் ஏற்றது. முகத்தின் சுருக்கங்களைப் போக்கி புத்துணர்ச்சியையும் இளமைப் பொலிவையும் தக்க வைத்துக் கொள்ள உதவும். குறிப்பாக வடுக்கள் இருந்த சுவடு தெரியாமல் மறையும்.



## முதுமையான தோற்றத்தை மாற்ற உதவும் உருளைக்கிழங்கு !!



உருளைக்கிழங்கில் இருக்கும் வைட்டமின் சி, சூரிய ஒளியால் சேதமடைந்த செல்களை குணப்படுத்துகிறது. இறந்த செல்களை சருமத்தில் இருந்து நீக்குகிறது. சருமத்தில் இருக்கும் சுருக்கங்களை குறைக்கிறது. இதில் உள்ள "கேடகோலேஸ்" என்ற நொதி சருமத்தின் கரும்புள்ளிகளை நீக்குகிறது.

சரும பராமரிப்பில் உருளைக்கிழங்கு முக்கிய பங்கு வகிக்கிறது. சூரிய ஒளியால் கருமை அடையும் சருமத்தை பளிச்சென மாற்றுவதற்கும், முகத்தில் இருக்கும் பருக்களை அகற்றுவதற்கும் உருளைக்கிழங்கைப் பயன்படுத்தலாம்.

உருளைக்கிழங்கில் இருக்கும் வைட்டமின் சி, சூரிய ஒளியால் சேதமடைந்த செல்களை குணப்படுத்துகிறது. இறந்த செல்களை சருமத்தில் இருந்து நீக்குகிறது. சருமத்தில் இருக்கும் சுருக்கங்களை குறைக்கிறது. இதில் உள்ள "கேடகோலேஸ்" என்ற நொதி கரும்புள்ளிகளை நீக்குகிறது.


உருளைக்கிழங்கை நன்றாக அரைத்து சாறினை வடிகட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். பருத்திப் பஞ்சு அல்லது துணியை அந்த சாற்றில் நனைத்து, முகம் முழுவதும் தடவவும். பத்து நிமிடம் கழித்து குளிர்ந்த நீரால் முகத்தைக் கழுவவும். இவ்வாறு தொடர்ந்து ஒரு மாதம் செய்தால் கருமை நீங்கி முகம் பொலிவாகும்.

உருளைக்கிழங்கைக் கொண்டு பேஸ் மாஸ்க் தயாரித்து பயன்படுத்துவதால் சருமம் பளிச்சிடுவது மட்டுமில்லாமல், அதில் இருக்கும் ஆன்டிஆக்சி டண்டுகள் முகத்தில் முதுமையான தோற்றத்தை மாற்றி, இளமைப் பொலிவைத் தருகின்றன.

பாதி அளவு உருளைக்கிழங்கை நன்றாக அரைத்து, அதனுடன் 1 டீஸ்பூன் கடலைமாவு, 1 டீஸ்பூன் எலுமிச்சம் பழச்சாறு கலந்து முகத்தில் பூசவும். 15 நிமிடங்கள் கழித்து மிதமான சூடுள்ள நீரில் முகத்தைக் கழுவவும். இவ்வாறு செய்வதால் சருமத்தில் படிந்து இருக்கும் இறந்த செல்கள் நீங்கி மிருதுவாகும்.

## குழந்தைகளின் சளியை கட்டுப்படுத்த உதவும் கற்பூரவல்லி மூலிகை....!!

கற்பூரவல்லி மூலிகை இருமல், சளி, ஜலதோஷம் போன்ற நோய்களுக்கு முக்கிய மருந்து. வியர்வை பெருக்கியாகவும், கோழையகற்றிக் காய்ச்சல் தணிக்கும் மருந்தாகும். இலைச் சாற்றை சர்க்கரை கலந்து குழந்தைகளுக்கு கொடுக்க சீதள இருமல் தீரும்.



இலைச்சாறு, நல்லெண்ணெய், சர்க்கரை இவற்றை நன்குகலக்கி நெற்றியில் பற்றுப் போடத் தலைவலி நீங்கும்.சூட்டைத் தணிக்கும். இலை, காம்புகளைக் குடிநீராக்கிக் கொடுக்க இருமல், சளிக் காச்சல் போகும். இதன் இலைகளை எடுத்து கழுவி சாறெடுத்து இரண்டு மி.லி சாருடன் எட்டு மி.லி தேனுடன் கலந்து குழந்தைகளுக்கு கொடுத்து வந்தால் மார்பு சளி கட்டுக்குள் வரும்.

கற்பூரவல்லி மூலிகை குழந்தைகளின் அஜீரண வாந்தியை நிறுத்தக் கூடிய மருத்துவ குணத்தைப் பெற்றிருக்கிறது. கட்டிகளுக்கு இந்த இலையை அரைத்துக் கட்ட கட்டிகள் கரையும். தசைகள் சுருங்குவதைத் தடுக்கும். வயிறு சம்பந்தப்பட்ட நோய், இளைப்பு நோய்களுக்கு உள் மருந்தாகவும், கண் அழற்சிக்கும் இதன் சாறு மேல் பூச்சாக தடவ குணம் தரும்.

சிறுநீரை எளிதில் வெளிக் கொணரவும் பரிந்துரைக்கப்படுகிறது. இரத்தத்தை சுத்தப்படுத்தும் தாவரமாகவும் கருதப்படுகிறது. குழந்தைகளின் சளியை கட்டுப்படுத்த குழந்தைக்கு குடிப்பதற்காக கொதிக்க வைக்கும் நீரில், சுத்தமாக அலசி வைத்திருக்கும் 4 அல்லது 5 கற்பூரவல்லி இலைகளைப் போட்டு சிறிது நேரம் கழித்து எடுத்துவிடுங்கள். இலையின் சாறு முழுமையாக நீரில் இறங்கி தண்ணீர் லேசாக பச்சை நிறத்தை அடைந்து இருக்கும். அந்த நீரை மட்டும் குழந்தை பருகுவதற்குக் கொடுங்கள். 2 அல்லது 3 நாட்களுக்கு இதுபோன்ற நீரையே கொடுத்து வாருங்கள். குழந்தைக்கு சளியின் தீவிரம் கட்டுப்படும்.

வீட்டு வைத்தியத்தில் ஜலதோஷம், இருமல் நீங்க, இரண்டு கற்பூரவல்லி இலைகளை கழுவி, நசுக்கி சாறு பிழிந்து 1/2 தேக்கரண்டி தேனுடன் உண்டால் நிவாரணம் கிடைக்கும். ஒரு இலையை பறித்து கழுவி உணவு உண்பதற்கு முன் கடித்து மென்று சாப்பிட்டால் உணவு ஜீரணம் நன்றாக ஆகும்.

ஏதார்த்தங்களையும்
மீறிய கற்பனையின்
கடலில் மிதந்து
கொண்டிருக்கிறேன்
என்னோடு
நீயிருக்கிறாய் எனை
கரை சேர்த்திடுவாய்
என்ற நம்பிக்கையில்...



# புதிய அரசாங்கத்தின் இராஜாங்க அமைச்சர்கள் பதவிப் பிரமாணம்

அதன்படி இன்று பதியேற்ற 37 புதிய இராஜாங்க அமைச்சர்களின் விபரம் பின்வருமாறு,

01. ஜகத் புஷ்பகுமார - வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர்
02. ரஞ்சித் சியபலாபிட்டிய - நிதி இராஜாங்க அமைச்சர்
03. லசந்த அழகியவன்ன - போக்குவரத்து இராஜாங்க அமைச்சர்
04. திலும் அமுனுகம - முதலீடு மற்றும் ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர்
05. கனக ஹேரத் - தொழிநுட்ப இராஜாங்க அமைச்சர்
06. ஜானக வக்கும்புர - மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்
07. செஹான் சேமசிங்க -நிதி இராஜாங்க அமைச்சர்
08. மொஹான் பிரியதர்ஷன் டி சில்வா - விவசாய இராஜாங்க அமைச்சர்
09. தேனுக விதானகே - நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்
10. பிரமித பண்டார தென்னகோன் - பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்
11. ரோஹன திஸாநாயக்க - விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார இராஜாங்க அமைச்சர்
12. அருந்திக பெர்னாண்டோ -நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு இராஜாங்க அமைச்சர்
13. விஜித பேருகொட - பிரிவெனா கல்வி இராஜாங்க அமைச்சர்
14. லொஹான் ரத்வத்த - பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்
15. தாரக பாலசூரிய - வெளிவிவகார இராஜாங்க அமைச்சர்
16. இந்திக்க அனுருத்த - மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர்
17. சனத் நிஷாந்த - நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர்
18. சிறிபால கம்லத் - நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர்
19. சாந்த பண்டார - ஊடகத்துறை இராஜாங்க அமைச்சர்
20. அனுராத ஜயரத்ன - நீதி மற்றும் சிறைச்சாலைகள் இராஜாங்க அமைச்சர்
21. சதாசிவம் வியாழேந்திரன் - வர்த்தக இராஜாங்க அமைச்சர்
22. சிசிர ஜெயக்கொடி - சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்
23. பியால் நிஷாந்த டி சில்வா - கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்
24. பிரசன்ன ரணவீர - சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்
25. டி.வி.சானக்க - வனவிலங்கு மற்றும் வன வளங்கள் இராஜாங்க அமைச்சர்
26. டி.பி.ஹேரத் - வள அபிவிருத்திக்கான இராஜாங்க அமைச்சர்
27. ஷசீந்திர ராஜபக்ச - நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்
28. சீதா அரம்பேபொல - சுகாதார இராஜாங்க அமைச்சர்
29. காதர் மஸ்தான் - கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர்
30. அசோக பிரியந்த - உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர்
31. அரவிந்த குமார் - கல்வி இராஜாங்க அமைச்சர்
32. கீதா குமாரசிங்க - பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகார இராஜாங்க அமைச்சர்
33. சிவநேசதுரை சந்திரகாந்தன் - கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்
34. சுரேஷ் ராகவன் - உயர் கல்வி இராஜாங்க அமைச்சர்
35. டயானா கமகே - சுற்றுலா இராஜாங்க அமைச்சர்
36. சாமர தசநாயக்க - ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்
37. அனுப பாஸ்குவல் - சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்



# IMF ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடியாது: மஹிந்த யாப்பா அபேவர்தன

சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) இலங்கை செய்து கொண்ட ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தில் வரிகள் தொடர்பான சில முக்கிய விடயங்கள் உள்ளதால் அது தொடர்பான விவரங்களை பாராளுமன்றத்திற்கு வழங்க முடியாது என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன அறிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர்கள் மட்ட ஒப்பந்தம் தொடர்பாக நான் மத்திய வங்கியின் ஆளுநருடன் கலந்துரையாடியுள்ளேன். நந்தலால் வீரசிங்கவும் அதனை பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்கு தாம் எதிர்க்கவில்லை எனவும், அதில் வரி தொடர்பான முக்கிய விடயங்கள் உள்ளதே பிரச்சினை எனவும் அவர் என்னிடம் தெரிவித்தார்" என சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி இது தொடர்பில் விவாதத்திற்கு அழைப்பு விடுக்க உள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொரடாவான லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

"நாங்கள் சர்வதேச நாணய நிதியத்தின் ஊழியர் நிலை ஒப்பந்தம் தொடர்பில் விவாதம் நடத்த விரும்புகிறோம், ஆனால் விவாதம் நடைபெறுவதற்கு முன்னர் அது சபையில் தாக்கல் செய்யப்பட வேண்டும்." என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தம் ஸ்தாபிக்கப்பட்டவுடன் அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய தேசிய சபையில் சமர்ப்பிக்கப்படும் என அவைத் தலைவர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். "நாங்கள் விரைவில் தேசிய பேரவையை நிறுவுவோம், அதன் பின்னர் IMF ஊழியர்கள் மட்ட ஒப்பந்தத்தை முன்வைத்து கட்சித் தலைவர்களின் கருத்தைப் பெறலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

பணியாளர் மட்ட ஒப்பந்தத்திலுள்ள முக்கியத் தகவல்களை விட்டுவிட வேண்டும். விவரங்களை அவையில் சமர்ப்பிக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹேஷா விதானகே முன்மொழிந்தார்.



# ஜனாதிபதி – ரஷ்ய தூதுவர் சந்திப்பு



இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் யூரி மேட்டேரி. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இலங்கைக்கான ரஷ்ய தூதுவரின் சேவையை ஜனாதிபதி விக்கிரமசிங்க பாராட்டியுள்ளார்.

தூதுவர் தனது பதவிக்காலம் முடிவடைந்து இலங்கையை விட்டு வெளியேறினாலும், இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகளை வலுப்படுத்த தன்னால் முடிந்த அனைத்தையும் செய்வதாக உறுதியளித்துள்ளார்.

தூதுவர் யூரி மேட்டேரியின் எதிர்கால முயற்சிகள் அனைத்தும் சிறப்பாக அமைய ஜனாதிபதி விக்கிரமசிங்க வாழ்த்து தெரிவித்துள்ளார்.

# விளையாட்டு செய்திகள்

## இலங்கையில் சர்வதேச கால்பந்தாட்ட மைதானத்தை நிர்மாணிப்பது தொடர்பில் கலந்துரையாடல்

இலங்கையில் சர்வதேச கால்பந்தாட்ட மைதானத்தை நிர்மாணிப்பது தொடர்பில் சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ கட்டார் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் ஷேக் ஹமட் பின் கலீபா பின் அஹமட் அல்தானியுடன் கலந்துரையாடியுள்ளார்.

கட்டார் கால்பந்து சம்மேளன தலைவருடனான சந்திப்பில் விளையாட்டு சுற்றுலாவை மேம்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டதாக அமைச்சர் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கைக்கு குறிப்பாக விளையாட்டு சுற்றுலாவிற்கு உதவுவது தொடர்பாக பயனுள்ள கலந்துரையாடல் ஒன்று முன்னெடுக்கப்பட்டதாக அவர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சர்வதேச கால்பந்தாட்ட மைதானத்தை அமைப்பதற்கு காணி வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.




## அமெரிக்க பகிரங்க டென்னிஸ்

அமெரிக்க பகிரங்க டென்னிஸ் தொடரின் பெண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிகளில் வெற்றிபெற்று போலந்தின் இகா ஸ்விடெக் மற்றும் துனிசியாவின் ஒன்ஸ் ஜபீர் ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.

முதலாவது அரையிறுதிப் போட்டியில், போலந்தின் இகா ஸ்விடெக்கும் பெலராஸின் அரினா சபலெங்காவும் மோதினர்.

இப்போட்டியில், போலந்தின் இகா ஸ்விடெக், 3-6, 6-1, 6-4 என்ற செட் கணக்குகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், துனிசியாவின் ஒன்ஸ் ஜபீர், பிரான்ஸின் கரோலின் கார்ஸியாவை எதிர்கொண்டார்.

இப்போட்டியில், துனிசியாவின் ஒன்ஸ் ஜபீர், 6-1, 6-3 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு தகுதிபெற்றார்.




## டயமன்ட் லீக் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் யுபுன் அபேகோன் ஐந்தாமிடம்



டயமன்ட் லீக் போட்டிகளில் ஆடவருக்கான 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தில் இலங்கையின் யுபுன் அபேகோன் ஐந்தாமிடம் பெற்றுள்ளார்.

சூரிக் நகரில் இடம்பெற்ற இந்த போட்டியில் டிரேவோன் ப்ரோமெல் முதலிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## தோல்விக்கு பிறகு கொந்தளித்த ஆப்கானிஸ்தான் ரசிகர்கள்!

ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் அன்று (7ஆம் திகதி) இரவு ஷார்ஜா கிரிக்கெட் மைதானத்தில் ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான போட்டியின் பின்னர், ஆப்கானிஸ்தான் பார்வையாளர்கள் குழுவொன்று மைதானத்தை சேதப்படுத்தி, கலவரமாக நடந்துகொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஆப்கானிஸ்தான் பார்வையாளர்கள் என்று கூறிக் கொண்ட ஒரு கும்பல் மைதானத்தில் இருந்த நாற்காலிகளை உடைத்து பாகிஸ்தான் பார்வையாளர்கள் மீது தாக்குதல் நடத்தியதாகவும், மைதானம் பலத்த சேதம் அடைந்ததாகவும் தெரிய வந்துள்ளது.

அந்த போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிராக ஆப்கானிஸ்தான் அணி ஒரு விக்கெட் வித்தியாசத்தில் படுதோல்வி அடைந்தது.

## ஆப்கான் வீரரை துடுப்பாட்ட மட்டையால் அடிக்க வந்த ஆசிப் அலி!

ஆசியக் கிண்ண கிரிக்கெட் போட்டியின் போது ஆப்கானிஸ்தான் பந்துவீச்சாளர் பரீத் அகமது மாலிக்கை பாகிஸ்தான் வீரர் ஆசிப் அலி துடுப்பாட்ட மட்டையை கொண்டு அடிக்க வந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளது.

சார்ஜாவில் நடைபெற்ற போட்டியில் வென்று பாகிஸ்தான் இறுதி போட்டிக்கு முன்னேறியது. கடைசி ஓவரின் 4வது பந்தில் சிக்சர் விளாசிய ஆசிப் அலி, மாலிக் வீசிய அடுத்த பந்தில் ஆட்டமிழந்தார்.

இதையடுத்து மாலிக் கிண்டலடிக்க, மட்டையை கொண்டு ஆசிப் அலி அடிக்க வந்தார். அங்கிருந்த மற்ற வீரர்கள் தலையிட்டு, இருவரையும் சமாதானப்படுத்தியதால் ஆசிப் அலி விலகிச் சென்றார்.



## இங்கிலாந்து, தென்னாப்பிரிக்கா டெஸ்ட் போட்டி இடைநிறுத்தம்!

மகாராணி இரண்டாம் எலிசபெத் இறந்ததைத் தொடர்ந்து, ஓவலில் இங்கிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா இடையே இன்று நடைபெறவிருந்த டெஸ்ட் போட்டி இரத்து செய்யப்பட்டுள்ளதாக இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. இதேவேளை திட்டமிடப்பட்டிருந்த அனைத்து போட்டிகளும் இரத்து செய்யப்பட்டது.



# உலக பார்வை



## எலிசபெத் மகாராணி காலமானார்

இங்கிலாந்து மகாராணி இரண்டாம் எலிசபெத் உடல்நலக்குறைவால் காலமானார். 96 வயதான அவர் உடல் நலம் இன்மையால் மருத்துவ கண்காணிப்பில் இருந்தார்.

இந்நிலையில், அவர் காலமானதாக அறிவிக்கப்பட்டுள்ளது. மகாராணி எலிசபெத்தின் உடல்நிலை அவ்வப்போது தொடர்ந்து பாதிப்புக்குள்ளாகி வந்த நிலையில், சமீபத்தில் புதிதாக தெரிவான பிரித்தானிய பிரதமர் லிஸ் ட்ரஸை சந்தித்து, அவருக்கு வாழ்த்துக் கூறியிருந்தார்.

கடந்த இரண்டு நாட்களாக சுகவீனமுற்றிருந்த மகாராணி, பால்மோரல் இல்லத்தில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் காலமானதாக பக்கிங்ஹாம் அரண்மனை செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரின் மரணத்தை அடுத்து, உலக நாடுகளின் தலைவர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். 21 ஏப்ரல் 1926 அன்று லண்டனில் உள்ள மேஃபேரில் பிறந்தவர் எலிசபெத் மகாராணி. பிரிட்டிஷ் வரலாற்றில் சுமார் 70 ஆண்டுகாலம் அரச பதவியில் இருந்தவர். தனது பதவிக்கால வரலாற்றில் 15 பிரதமர்களுக்கு பதவிப்பிரமாணம் செய்து வைத்துள்ளார். அவரது மரணத்தையடுத்து, முன்னாள் வேல்ஸ் இளவரசரான அவரது மூத்த மகன் சார்ல்ஸ், புதிய அரசராக இருந்து 14 பொதுநலவாய நாடுகளுக்குத் தலைவராக வழிநடத்தவுள்ளார்.



## உலக பொருளாதாரத்தில் இந்தியா பிரகாசமான இடத்தில் - IMF தலைவர் பாராட்டு

உலகளாவிய நிச்சயமற்ற தன்மை காணப்பட்ட போதிலும் உலக பொருளாதாரத்தில் இந்தியா தொடர்ந்து பிரகாசமான இடத்தில் திகழ்வதாக சர்வதேச நாணய நிதியத்தின்(IMF) தலைவர் Kristalina Georgieva பாராட்டியுள்ளார்.

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுடனான சந்திப்பின் போது IMF தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

இதன்போது இரு தலைவர்களும் தமது கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.

உணவு மற்றும் எரிசக்தி விலைகள் மற்றும் சர்வதேச கடன் அதிகரிப்பு காரணமாக ஏற்பட்டுள்ள உலகளாவிய பணவீக்கத்தின் அதிகரிப்பு குறைந்த வருமானம் கொண்ட நாடுகளை மிகவும் பாதித்துள்ளதாக இரு தலைவர்களும் ஒப்புக் கொண்டுள்ளனர்.



INTERNATIONAL MONETARY FUND

## இறந்த தாய் உடலை வீல் சேரில் வைத்து சுடுகாட்டிற்கு கொண்டு வந்த மகன்!

மணப்பாறை அருகே பணம் இல்லாததால் இறந்த தாய் உடலை வீல் சேரில் வைத்து சுடுகாட்டிற்கு மகன் கொண்டு வந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. திருச்சி மாவட்டம், மணப்பாறை பாரதியார் நகர் பகுதியைச் சேர்ந்தவர் பெரியசாமி. சுமார் 90 வயதை எட்டிய இவரது மனைவி ராஜேஸ்வரி. தம்பதியினர் இருவரும் மகன் முருகானந்தத்துடன் வசித்து வந்தனர். கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு ராஜேஸ்வரிக்கு உடல் நலம் பாதிக்கவே அவரை மகன் முருகானந்தம் தன்னுடன் வைத்து கவனித்து வந்துள்ளார். இருப்பினும் ராஜேஸ்வரிக்கு உடல் முழுவதும் அரிப்பு ஏற்பட்டு புண்ணான நிலையில் அந்த தொற்று பரவ வாய்ப்புள்ளது என்று மருத்துவமனை தரப்பில் தெரிவிக்கப்பட்டு உள்ளது. எனவே வீட்டில் வைத்து தாயை கவனித்து வந்த முருகானந்தம் எலக்ட்ரீசியனாக வேலை பார்த்து வருகிறார். தாயை கவனிப்பதற்காக பெரும்பாலான நாட்கள் வேலைக்கு செல்லாமல் இருந்துள்ளார். இதனால் வறுமை அவரை வாட்டியது. இந்தநிலையில் தொடர் சிகிச்சையில் இருந்த ராஜேஸ்வரி இறந்து விட்டார். வறுமை ஒருபுறம், அறியாமை மறுபுறம் என்பதால் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்த முருகானந்தம் அக்கம் பக்கத்தினர் என யாரிடமும் ஏதும் சொல்லாமல் உடலை தகனம் செய்ய முடிவு செய்தார்.

அதற்காக தன் தாயின் உடலை ஒரு வீல் சேரில் அமர்ந்திருப்பது போல் வைத்து உடலை சுற்றி துணியால் கட்டினார். பின்னர் சுமார் இரண்டரை கிலோ மீற்றர் தூரம் உள்ள மணப்பாறை நகராட்சியின் எரிவாயு தகன மேடை அமைந்துள்ள செவலூர் பிரிவு சாலைக்கு எடுத்து சென்றார். பொழுது விடிவதற்குள் உடலை எடுத்து சென்ற முருகானந்தம் தகனம் செய்திட எரிவாயு தகன மேடை பராமரிப்பாளரான ஸ்ரீதரனுக்கு தகவல் கொடுத்தார். இதற்கிடையே சுடுகாட்டின் அருகே உள்ளவர்கள் பார்த்த போது இறந்த மூதாட்டியின் உடல் வீல் சேரில் எடுத்து வந்திருப்பது கண்டு அதிர்ச்சி அடைந்தனர். மேலும் சுடுகாட்டிற்கு வந்த பராமரிப்பாளர் பார்த்து அரசின் பல்வேறு உதவிகள் உள்ள நிலையில் ஏன் இது போன்று வீல் சேரில் உடலை கொண்டு வந்தீர்கள்? என்று கேட்டார். அப்போது தெரியாமல் இதுபோன்று செய்து விட்டேன் என்று கூறினார். பின்னர் எரிவாயு தகன மேடை பணியாளர் உடலை பெற்றுக்கொண்டு முறைப்படி இறுதி சடங்குகள் செய்து தகனம் செய்தார். அறியாமை மற்றும் வறுமையால் நிகழ்ந்த சம்பவம் ஒட்டுமொத்த மக்களின் உள்ளங்களையும் உருக்குலைய செய்திருக்கிறது.

## இனக் குழுக்கள் மோதலில் 380 பேர் பலி

வடகிழக்கு ஆப்பிரிக்க நாடான சூடானில் இரு இனக் குழுவினருக்கு இடையே அண்மைக் காலமாக நடைபெற்று வரும் மோதலில் இதுவரை 380 பேர் உயிரிழந்ததாக ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நாட்டின் டார்ஃபர் பகுதியில் அரபு பழங்குடியினருக்கும் அரபு அல்லாத பழங்குடியினருக்கும் இடையே கடந்த ஜனவரி முதல் ஆகஸ்ட் வரை 224 மோதல் சம்பவங்கள் நடைபெற்றதாகவும், இதில் 430 க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்ததாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சூடானில் நீண்ட காலமாக நீடித்து வரும் இன மோதல்கள், கடந்த ஆண்டு ஏற்பட்ட ராணுவப் புரட்சிக்குப் பிறகு மேலும் தீவிரமடைந்து இந்த உயிரிழப்புகள் ஏற்பட்டதாகக் கூறப்படுகிறது.



## இறந்த தந்தையை கண்முன் கொண்டு வந்த மகன்!

கொரோனாவால் உயிரிழந்த தந்தையை மெழுகு சிலை போல் வடிவமைத்து நெகிழ வைத்துள்ளார் அவரது மகன். தமிழ்நாட்டின் சேலத்தை சேர்ந்தவர் ஆரோக்கிய இயேசு ராஜா. சிவில் என்ஜினீயராக பணியாற்றி வருகிறார். இவரது தந்தையான பன்னீர்செல்வம் கடந்த 2021-ம் ஆண்டு கொரோனாவால் உயிரிழந்தார். தனது மகனுக்கு திருமணம் செய்து வைத்து அழகு பார்க்க வேண்டும் என அடிக்கடி பன்னீர்செல்வம் கூறுவது வழக்கமாம். இதனால் தன்னுடைய திருமணத்தன்று தந்தையின் ஆசையை நிறைவேற்ற எண்ணினார் ஆரோக்கிய இயேசு ராஜா. இதற்காக அச்சு அசலாக தந்தையை போன்றே மெழுகு சிலை ஒன்றை வடிவமைக்க ஆசைப்பட்டார். இதற்கு 5 லட்ச ரூபாய் வரை செலவானது. அந்த சிலையை வீட்டில் வைத்து தினந்தோறும் வணங்கி சென்றார். இதற்கிடையே ஆரோக்கிய இயேசு ராஜாவுக்கும் - ஜூலியட் லதா என்பவருக்கும் திருமணம் நடைபெற நிச்சயிக்கப்பட்டது. திருமணத்தன்று மண்டபத்தின் இருக்கையில் தந்தையின் சிலையை அமர வைத்து திருமண ஜோடிகளுக்கு வரவேற்பு விழாவும் கோலாகலமாக நடந்தது. அப்போது பன்னீர்செல்வம் சிலையின் முன்பாக காலில் விழுந்து மணமக்கள் ஆசிபெற்றனர். அதேபோல் உறவினர்களும் அந்த மெழுகு சிலை பார்த்து கண் கலங்கினர். பின்னர் அனைவரும் அருகில் நின்று போட்டோ எடுத்துக்கொண்டது குறிப்பிடத்தக்கது.

# வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவர்கள் பளுதூக்கலில் பதக்கங்கள் குவிப்பு

அன்றைய தினம் (2022.09.09) யாழ்ப்பாணம் கந்தர்மடம் சைவப்பிரகாச பாடசாலையில் நடைபெற்ற பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட பளுதூக்கும் போட்டியில் 17க்கு உட்பட்ட ஆண்கள் பிரிவில் 49 KG எடை பிரிவில் நா.நகிந்தன் 82 KG தூக்கி தங்கமும், ஜொ.ஜதுர்சன் 55 KG எடை பிரிவில் 97 KG தூக்கி வெள்ளி பதக்கமும், கி.சுபிஸ்கரன் 59 KG எடை பிரிவில் 100 KG தூக்கி வெள்ளி பதக்கமும், யோ.சாருஜன் 55 KG எடை பிரிவில் 80 முபு தூக்கி 5ஆம் இடமும், 20 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் அ.கோகுலன் 65 KG எடை பிரிவில் 125 KG தூக்கி தங்க பதக்கமும் வென்றுள்ளார்கள்.

இதேவேளை, வவுனியா/சைவப்பிரகாச மகளிர் கல்லூரியை சேர்ந்த கு.குலவிழி 59KG எடைப்பிரிவில் 72KG தூக்கி, 1ம் இடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வவுனியா மண்ணிற்கும், பாடசாலை சமூகத்திற்கும் பெருமை சேர்த்துள்ள வவுனியா நெளுக்குளம் கலைமகள் மகா வித்தியாலய மாணவர்கள் மற்றும் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் மாணவி ஆகியோருக்கு வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, பயிற்றுவிப்பாளருக்கும், மாணவர்களின் பெற்றோருக்கும் பாராட்டுகள்!







# ராணி எலிசபெத் மறைவு..! வானில் தோன்றிய அதிசயம் இரட்டை வானவில் !

பிரித்தானிய ராணியார் இரண்டாம் எலிசபெத் மரணமடைந்த தகவல் வெளியான வேளையில் பக்கிங்ஹாம் அரண்மனை மீது இரட்டை வானவில் உருவாகியுள்ளது பார்வையாளர்களை உருக வைத்துள்ளது.

பிரித்தானிய ராணியாரின் உடல்நிலை மோசமடைந்து வருவதாக செய்தி வெளியானதால், அரண்மனைக்கு வெளியே பொதுமக்கள் திரண்டு வந்து அஞ்சலி செலுத்திய வண்ணம் இருந்தனர்.

இந்த நிலையில் சோகமான சூழலுக்கு ஏற்றவாறு சில மணி நேரங்களுக்கு முன்புதான் அங்கு மழை பெய்தது என்பதால் குளிர்ச்சியான வானிலை காணப்பட்டது. இந்த நிலையில்தான் அங்கு திடீரென வானவில் தோன்றியது.

சரியாக பக்கிம்ஹாம் அரண்மனை மீது இரட்டை வானவில் அங்கு தோன்றியது. இதை பார்த்ததும் அங்கு திரண்டிருந்த மக்கள் உணர்ச்சி வெள்ளத்தில் முழுக்கமிட்டனர்.



# எலிசபெத் மகாராணியின் மறைவை முன்னிட்டு செப்டம்பர் 19 ஆம் திகதி தேசிய துக்க தினம் பிரகடனம்



இரண்டாம் எலிசபெத் மகாராணியின் மறைவை முன்னிட்டு எதிர்வரும் 19 ஆம் திகதி நாட்டில் துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் ஆலோசனைக்கமைய துக்க தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், எதிர்வரும் 19 ஆம் திகதி வரை தேசியக் கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.



இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 11.09.2022 அன்று வெளியிடப்பட்டது.